# தொழில்நுட்ப அமைச்சு

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2023

**செலவினத் தலைப்பு இல.186**

## தொழில்நுட்ப அமைச்சரின் செயலாற்றுகை அறிக்கைக்கான செய்தி



தொழில் நுட்ப அமைச்சின் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். 2030 ஆம் ஆண்டிற்கான தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்திற்கான எமது இடையறா அர்ப்பணிப்பினை இது வெளிப்படுத்துகின்றது. இவ்வாண்டின் சாதனைகள் பன்மடங்காயினும், நான் முக்கியமானவற்றினை இங்கு முன்னிலைப்படுத்த விழைகின்றேன்.

அரசாங்க நிறுவனங்களுக்கான பாதுகாப்பானதும் திறமையானதுமான நிகழ்நிலைக் கொடுப்பனவுகளை எளிதாக்கி, வெளிப்படையானதும் துல்லியமானதுமான வருவாய் சேகரிப்பினை ஏற்படுத்தவுமே அரச டிஜிட்டல் கொடுப்பனவுத் தளம்; (GDPP) அல்லது 'Gov Pay' ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டின் தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்ட இல. 9 இன் மூலம் தரவுப் பாதுகாப்பு அதிகார சபையினைத் தாபித்ததன் காரணமாக பொது ஆலோசனைகள் மற்றும் கொள்கை அபிவிருத்தியின் ஊடாக தனிப்பட்ட தரவுகளை ஒழுங்குபடுத்தி, பாதுகாக்க முடிந்துள்ளது.

இலங்கையின் தனித்துவ டிஜிட்டல் அடையாள கருத்திட்டமானது, (SLUDI) பாதுகாப்பான உயிர்ம (Biometrics) அடையாளத் திட்டம் ஒன்றினை உருவாக்குவதற்காக முன்னெடுக்கப்படுகின்றது. 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தனிநபர்களுக்கான அடையாளத் திட்டமானது கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், சமூக நலன்புரித் திட்டங்கள் மற்றும் வரி செலுத்தல்கள் போன்ற பொதுச் சேவைகளை ஒழுங்குபடுத்துவதாக உள்ளது. இதனால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள் சேவைகளை விரிவுபடுத்துவதற்கு சேமிக்கப்பட்ட தரவுகளை அணுகக்கூடியதாக இருக்கும். உலக வங்கியின் உதவியுடன், பொருளாதார வளர்ச்சி, தொழில்வாய்ப்பு உருவாக்கம், மற்றும் சேவை வழங்கலை அதிகரிக்க தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயமானது (National Digital Economy Strategy - NDES) 2030 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிகொன் (DigiEcon) 2030 இன் நிகழ்ச்சி நிரல் மூலமாக வெற்றிகரமான கண்காட்சிகளையும் மாநாடுகளையும் நடத்தக் கூடியதாக இருந்தது.

சைபர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான சைபர் பாதுகாப்பு சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கண்காணிப்பு மற்றும் அமுலாக்கத்திற்காக சைபர் பாதுகாப்பு அதிகாரசபையினைத் ஸ்தாபிக்கும் செயற்பாட்டில் நாம் ஈடுபட்டுள்ளோம். தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கமட்ட சன்னிவேதனய- கனெக்ட் ஸ்ரீ லங்கா (Connect Sri Lanka) திட்டத்தின் மூலமாக கிராமப்புற புரோட்பேண்ட்(Broadband) அணுகலை விரிவுபடுத்தி 700 பாடசாலைகள் /பபர் (fiber) வலையமைப்பிற்குள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எமது டிஜிட்டல் பரிமாற்ற நிகழ்ச்சி நிரலுக்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும், இணை நிறுவனங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ச்சியான குழுப்பணி மற்றும் புத்தாக்கங்களினூடாக நாம் சந்தேகத்திற்கிடமின்றி இன்னும் பாரிய மைல்கற்களை அடைவோம்.

ரணில் விக்ரமசிங்க
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்
2024 ஜுலை 05

**தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரின் செய்தி**



**2030 தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயத்தினை** முன்னெடுப்பதற்கான எமது உறுதியான அர்ப்பணிப்பினை கோடிட்டுக் காட்டும் தொழில்நுட்ப அமைச்சின் 2023 ஆம் வருடாந்த செயற்திறன் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் நான் பெருமைப்படுகிறேன். இந்த ஆண்டானது பல முக்கிய சாதனைகளுடன் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. அவற்றை முன்னிலைப்படுத்துவதில் நான் பெரு மகிழ்வு கொள்கிறேன்.

எமது முக்கியமான சாதனைகளில் ஒன்று **அரச டிஜிட்டல் கொடுப்பனவு தளத்தினை (GDPP)** ஆரம்பித்ததாகும். இத்தளத்தின் மூலம் அரச நிறுவனங்களுக்கு நிகழ்நிலையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் புரட்சிகர மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு முடிந்துள்ளதுடன், பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் செயற்திறனான வருவாய் சேகரிப்பினையும் உறுதிசெய்ய கூடியதாகவிருந்தது. மேலும், **2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க** தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு சட்டமானது தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கான எமது முயற்சியில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. விரிவான பொதுமக்கள் ஆலோசனைகள் மற்றும் கொள்கை அபிவிருத்தி மூலம் தரவுப் பாதுகாப்பினை கண்காணிப்பதற்கு நாம் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை **(DPA)** ஒன்றினையும் நிறுவியுள்ளோம்.

**இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளம் (SLUDI)** திட்டமானது மற்றுமோர் மைல்கல்லாகும். இம்முயற்சியானது 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு பாதுகாப்பான உயிர்ம அடையாள முறைமையினை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், சமூக நலன்புரித் திட்டங்கள் மற்றும் வரி செலுத்தல்கள் போன்றவற்றிற்கான அணுகலை எளிதாக்குகின்றது. உலக வங்கியின் ஆதரவுடனான **தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் (NDES) 2030** திட்டமானது பொருளாதார வளர்ச்சி, தொழில்களின் உருவாக்கம், மற்றும் சேவை வழங்கல்களை மேம்படுத்துதம் கருவியாக உள்ளது. எமது னுபைநைஉழடெ 2030 திட்ட நிகழ்ச்சி நிரலானது பல்வேறு கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் மூலம் இம்முயற்சிகளை வெற்றிகரமாக காட்சிப்படுத்தியுள்ளது.

சைபர் பாதுகாப்பிற்கான அதிகரித்து வரும் தேவைகளுக்கு பதிலளிக்கும் வகையில் **இலங்கை சைபர் பாதுகாப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினை** நிறுவுவதற்கான விரிவான சைபர் பாதுகாப்பு **சட்ட வரைபினை** நாம் வரைந்துள்ளோம். இவ் அதிகார சபையானது வலுவான இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்யவும் கண்காணிக்கவும் தேவையான அதிகாரத்தினை வழங்கும். தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைமையிலான **கமட்ட சன்னிவேதனய- கனெக்ட் ஸ்ரீலங்கா** செயற்திட்டமானது கிராமிய புரோட்பேண்ட் அணுகலை கணிசமான அளவு விரிவுபடுத்தியுள்ளதுடன், பாடசாலை ∴பைபர் செயற்திட்டத்தின் கீழ் 700 பாடசாலைகளை ∴பபர் வலையமைப்புடன் இணைத்துள்ளது.

ஆற்றல் மிக்க டிஜிட்டல் பொருளாதாரத்தால் இயக்கப்படும் **டிஜிட்டல் ரீதியான ஸ்மார்ட் ஸ்ரீலங்காவை** உருவாக்குவதே எமது முக்கிய இலக்காகும். பிரசைகள் நட்புறவான முறையில் அரசாங்க செயற்பாடுகளை டிஜிட்டல் மயமாக்குவதை இலக்காகக் கொண்ட பல்வேறு முயற்சிகள் மூலம் இந்நோக்கு உணரப்படுகின்றது. வரவிருக்கும் **டிஜிட்டல் அடையாள** திட்டமானது இம்மாற்றத்தின் முக்கிய அடிக்கல்லாக அமையும். மேலும், 2027 ஆம் ஆண்டளவில் ஏற்றுமதி வருவாயில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களை அடையும் இலக்குடன், கூட்டுத்தாபனத் துறைக்கு குறிப்பாக தகவல் தொழில்நுட்ப ICT/BPM துறைக்கு கணிசமான ஊக்குவிப்புச் சலுகைகளை நாம் தொடர்ந்து வழங்கி வருகிறோம்.

**இலங்கை அரசாங்க வலையமைப்பு 2.0 லங்கா அரச கிளவுட் 2.0** மற்றும் நாடு முழுவதுமுள்ள 10,250 பாடசாலைகளுக்கான ∴பபர் இணைப்பை வழங்கல் போன்ற பிரதான திட்டங்கள் பல ஏற்கனவே நடைபெற்று வருகின்றன. 2022 மார்ச் 19 இல் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட **2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க** தரவுப் பாதுகாப்புச் சட்டமானது, 2023 இல் தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினை நிறுவியதன் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. டிஜிட்டல் முன்னேற்றங்களுடன் குடிமக்களின் தனியுரிமையைப் பாதுகாக்க தனிப்பட்ட தரவுச் செயலாக்கத்தினை ஒழுங்குபடுத்தவதனை இது உறுதி செய்கின்றது.

2023 ஆம் ஆண்டுமுழுவம் தமது இடைவிடாத ஆதரவினை வழங்கிய அமைச்சின் அர்ப்பணிபாபன ஊழியர்கள் மறறும் எமது எல்லைக்குட்பட்ட துறைகள், நிறுவனங்கள் எனபவற்றின் அலுவலர்களுக்கும் எனது மனமார்நத நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய கண்டுபிடிப்புகளையும் ஒத்துழைப்பினையும் நாம தொடர்ந்து ஊக்குவித்து வரும் நிலையில், இனிவரும் ஆண்டுகளில் மேலும் பெரிய மைல்கற்களை எட்டுவோம் என் நான் நம்புகிறேன்.

பேராசிரியர். என்.டி. குணவர்தன
செயலாளர்
தொழில்நுட்ப அமைச்சு

## உள்ளடக்க அட்டவணை


**அத்தியாயம் 01 - நிறுவன விபரக்குறிப்பு ∴ பதவிநிலை சாராம்சம்........................................................5**

1.1 அறிமுகம்.................................................................................................5

1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்.......................................................5

1.3 முக்கிய செயற்பாடுகள்....................................................................................7

1.4 நிறுவன வரைபடம்..........................................................................................8

1.5 வெளிநாட்டு நிதிஉதவித் திட்டங்கள் (இருப்பின்)...............................................8

1.6 தொழில்நுட்ப அமைச்சின் கீழான விசேட திட்டங்கள்.........................................8

1.6.1. டிஜிட்டல் அரசாங்க கட்டண திட்டம் (DGPS)..................................................8

1.6.2. இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளத் திட்டம் (SLUDI)..............................9

1.6.3. தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2023-2030.................................10

1.6.4. டிஜிகொன் - DigiEcon (சர்வதேச மாநாடும் கண்காட்சியும்)..............................10

1.6.5. தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை...................................................................11

**அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால கண்ணோட்டமும்...........................................12**

2.1 அரசாங்க டிஜிட்டல் கட்டண முறைமை (GDPS)..............................................12

2.2 இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளம் (SLUDI)......................................13

2.3 தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை.....................................................................13

2.4 இணையப் பாதுகாப்பு சட்டம்........................................................................13

2.5 தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2023-2030.................................13

2.6 டிஜிகொன் - (சர்வதேச மாநாடும் கண்காட்சியும்).............................................14

**அத்தியாயம் 03: நிதி முன்னேற்றம்............................................................................15**

3.1 நிதி முன்னேற்ற அறிக்கை.............................................................................15

3.2 நிதி நிலைமை அறிக்கை................................................................................16

3.3 காசுப் பாய்ச்சல் அறிக்கை.............................................................................17

3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்................................................................18

3.5 வருமான சேகரிப்பின் முன்னேற்றம்.................................................................18

3.6 நிதி ஒதுக்கீட்டின் பயன்பாட்டு முன்னேற்றம்....................................................18

3.7 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை..........................................................19

**அத்தியாயம் 04 – முன்னேற்ற குறிகாட்டிகள்..............................................................23**

4.1 நிறுவனத்தின் முன்னேற்ற குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)..............................................................................23

**அத்தியாயம் - 05 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (ளுனுபு) அடைவதற்கான செயலாற்றுகை24**

5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும்...........24

**அத்தியாயம் 06 – மனித வள விபரக்குறிப்பு.................................................................25**

6.1 ஆளணி முகாமைத்துவம்...............................................................................25

**அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை..........................................................................26**

**அத்தியாயம் 08.- அமைச்சின் கீழான நிறுவனங்கள்......................................................34**

**8.1.இலங்கை கணணி அவசர தயார்நிலை அணி (SL CERT)........................................34**

8.1.1. நோக்கு......................................................................................................34

8.1.2 செயற்பணி...................................................................................................34

8.1.3. கடமைகளும் செயற்பாடுகளும் ........ 34
8.1.4. கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றங்கள் ........ 35
**8.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) ........ 38**
8.2.1 தொலை நோக்கு ........ 38
8.2.2 செயற்பணி ........ 38
8.2.3. நோக்கங்கள் ........ 38
8.2.4 கருத்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம் ........ 40
**8.3 இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL) ........ 43**
8.3.1 நோக்கு ........ 43
8.3.2 செயற்பணி ........ 43
8.3.3 நோக்கங்கள் ........ 43
8.3.4 திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் ........ 45
**8.4 இலங்கை தரநிர்ணய நிறுவனம் (SLSI) ........ 47**
8.4.1 நோக்கு ........ 47
8.4.2 செயற்பணி ........ 47
8.4.3 பிரதான தொழிற்பாடுகள் ........ 47
8.4.4 சிறப்பு அடைவுகள்: ........ 47
8.4.5 கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் ........ 49

# அத்தியாயம் 01 - நிறுவன விபரக்குறிப்பு / பதவிநிலை சாராம்சம்

## 1.1 அறிமுகம்

தொழில்நுட்ப அமைச்சானது இலங்கையின் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44(1). 45(1) மற்றும் 47(1) (அ) (ஆ) ஆகிய உறுப்புரிமைகளின் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரத்தினைக் கொண்டு அவரால் தாபிக்கப்பட்டு இல. 2289Æ43 உம் 2022 ஜுலை 22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தங்கள் செய்யப்பட்டன.

**நடைமுறைப்படுத்தப்படவேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைகள்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் 2003 இன் 27 ஆம் இலக்கம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் (திருத்திய) 2008 இன் 38 ஆம் இலக்கம்

இலத்திரனியல் பரிமாற்ற சட்டம் 2006 இன் 19 ஆம் இலக்கம்

இலங்கை தர நிர்ணய சட்டம் 1984 இன் 6 அம் இலக்கம்

இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம் 1991 இன் 25 ஆம் இலக்கம்

இலங்கை தொலைத்தொடர்புச் சட்டம் (திருத்திய) 1996 இன் 27 ஆம் இலக்கம்

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டம் 2022 இன் 9 ஆம் இலக்கம்

**தொழில்நுட்ப அமைச்சின் கிழ் செயற்படும் நிறுவனங்கள் வருமாறு:**

1. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழவும் அதன் இணை நிறுவனங்களும்
2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்
3. இலங்கை கணனி அவசர தயார்நிலை அணி
4. இலங்கை தர நிர்ணய நிறுவனம்
5. தரவுப் பாதுகாப்பு அதிகார சபை
6. ரொபோடிக் பயன்பாட்டிற்கான சிறப்பு நிலையம்

## 1.2 நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

### நோக்கு

“ நவீன தொழில்நுட்பத்தால் வலுவூட்டப்பட்ட ஸ்மார்ட் செழிப்பான தேசம்”

### செயற்பணி

சமூக மற்றும் தொழிற்துறை மாற்றங்களின் ஊடாக தொழில்நுட்ப மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றின் தேசிய நோக்கங்களை அடைவதற்காக தொழில்நுட்ப அடிப்படையிலான கொள்கைகள், மூலோபாயங்கள், முன்னுரிமைகள், நிகழ்ச்சிகள், வேலைத்திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்கலும் புத்துயிர் பெற வைத்தலும்.


**அமைச்சின் நோக்கங்கள்**

1. அரச பொறிமுறை மற்றும் சந்தைத் துறைகளின் செயன்முறைகளை எளிதாக்குவதன் மூலம் திறமையானதும் மக்களை மையப்படுத்திய சேவைகள் , அறிவுப் பரிமாற்றம் என்பவற்றை வழங்கும் கருவியாக தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி டிஜிட்டல் ஆளுகையை விரிவுபடுத்தல்.
2. சர்வதேச இலத்திரனியல் வர்த்தகக் கட்டண முறைகள் என்பவற்றை நிறுவுதல்
3. நாடு தழுவிய அதிவேக தரவுப் பரிமாற்ற அமைப்பு மற்றும் தொடர்புடைய கைத்தொலைபேசி வலையமைப்பு என்பவற்றை நிறுவுதல்,
4. தரவுப் பாதகாப்பு இணையப் பாதுகாப்பு புலமைச் சொத்துக்கள் சட்டம் என்பவற்றிற்கான புதிய சட்டங்களையும் நிறுவன கட்டமைப்பினையும் அபிவிருத்தி செய்தல்
5. சுற்றாடல் உணர்திறன், தகவல் தொழில்நுட்பம், அறிவு மற்றும் திறன்கள் சுகாதாரம், சுற்றுலா. விளையாட்டு ஆகிய துறைகளில் இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுவதன் மூலம் டிஜிட்டல் ஆளுகை மற்றும் நிறுவன கட்டமைப்பிற்குத் தேவையான சட்ட முறைமை, ஒழுங்குபடுத்தல், கட்டமைப்பினை அறிமுகப்படுத்தல்
6. தொழில்நுட்பத் துறையின் ஏற்றுமதி பங்களிப்பினையும் தேசிய பொருளாதாரத்தின் அறிவு மற்றும் தொழில்சார் சேவைப் பங்களிப்பையும் விரிவுபடுத்துவதற்காக நிறுவன அபிவிருத்தி, தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் தொடர்புடைய சேவைகளை விரிவுபடுத்தி அதனை தொழில்நுட்ப நிறுவன பொருளாதாரமாக பரிமாற்றல்.

## 1.3 முக்கிய செயற்பாடுகள்

1. அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ்வரும் திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபன விடயங்கள் தொடர்பில் தொழில்நுட்பம் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள்,மற்றும் கருத்திட்டங்களை வகுத்தல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
2. செயற்திறனாகவும் மக்கள் நேய ரீதியாகவும் அமைச்சின் விடயப்பரப்பிற்கு கீழ் வரும் சேவைகளை வழங்கல்.
3. நவீன முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சகல கட்டமைப்புகளையும் நடைமுறைகளையும் புதுப்பித்தல், இதன் மூலம் மோசடி மற்றும் வீண்விரயத்தினையும் ஒழித்தல்.
4. நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் மூலம் அனைவருக்கும் தகவல் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. சேவை வழங்கலில் உற்பத்தித் திறன் மற்றும் செயற்திறனை ஊக்குவிப்பதற்காக அரச முகவர் நிறுவனங்களுக்கிடையே தகவல் தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக் கொடுத்தலும் மேற்பார்வை செய்தலும்.
6. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்கல்.
7. சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிலநுட்ப பயன்பாட்டை ஊக்குவிக்கவும், அதிகரிக்கவும் கூடிய மூலோபாயங்களை மேம்படுத்தல். தனியார் துறையின் பங்களிப்புடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முயற்சிகளை ஒருங்கிணைத்து வசதி செய்தல்.
8. இணையப் பாதுகாப்பு தொடர்பான சம்பவங்களில் தீவிரமாக தலையிட்டு தடுத்தல் நிர்வாகம் தொடர்பான தர நிர்ணயத்தினை செயற்படுத்தல்.
9. தர நிர்ணயம் மற்றும் நிர்வாகம் தொடர்பான விடயங்களை செயலாக்கல்.
10. ஒழுங்காக்கல் நடவடிக்கைகளை வடிவமைத்தல், பொதுமக்கள் நலனைப் பாதுகாத்தல், வளர்ந்துவரும் போட்டி சந்தையின் சவால்களுக்கு பதிலளித்தல் மூலம் தொலைத் தொடர்புத் துறையின் நிலைபேறான அபிவிருத்தியை விருத்தி செய்தல்.
11. நிறுவன விடயப்பரப்பிற்கக் கீழ் வரும் அனைத்து விடயங்களும் தொழில் நுட்ப அமைச்சரின் கீழ் கொண்டுவரப்படும்.
12. தொழில்நுட்ப அமைச்சின் கீழ் வரும் சகல நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்

## 1.4 நிறுவன வரைபடம்




## 1.5 வெளிநாட்டு நிதிஉதவித் திட்டங்கள் (இருப்பின்)

இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டை **(SLUDI)**

அ) திட்டத்தின் பெயர் : இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள அட்டை (SLUDI)

ஆ) நன்கொடை முகவர் : இந்திய அரசாங்கம் ( 300 கோடி இந்திய ரூபாய்கள்)

இ) திட்டத்திற்கான செலவின மதிப்பீடு – 300 கோடி இந்திய ரூபா மற்றும் ரூபா 6,810 மில்லியன்

ஈ) திட்டத்தின் காலம் : 2021 நவம்பர் - 2024 டிசம்பர்

## 1.6 தொழில்நுட்ப அமைச்சின் கீழான விசேட திட்டங்கள்

### 1.6.1. டிஜிட்டல் அரசாங்க கட்டண திட்டம் (DGPS)

2023 வரவு செலவுத் திட்ட முன்மொழிவின்படி பல்வேறு அரச நிறுவனங்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு பொது மக்களுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட சகல அரசாங்க கட்டணங்களும் இலத்திரனியல் முறையில் (நிகழ்நிலை) ஆக மேற்கொள்ளப்படல் கட்டாயமாகும் என்பதற்கு இணங்க ஆரம்பிக்கப்பட்டது.

**திட்டத்தின் நோக்கங்கள்:**

அரச நிறுவனங்களில் வழங்கப்படும் சேவைகளுக்கான வருமானத்தை சேகரிப்பதற்காக டிஜிட்டல் தளம் ஒன்றினைத் தாபிப்பதன் மூலம் அரச சேவைகளுக்கான கட்டணங்களை செலுத்தும்போது பிரசைக்கும் வர்த்தகத்திற்கும் நம்பகத்தன்மை, வசதி மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை மேம்படுத்தல்.

தரவுகளின் அடிப்படையிலான செயற்பாட்டின் மூலம் குறித்த நேரத்தில் செலுத்தப்படவேண்டிய தொகையினை சேகரிப்பதற்கு இந்த அமைப்பின் மூலம் வசதிகள் ஏற்படுவதோடு, வரவட்டை, கடனட்டை, கைபேசி செயலிகள், வங்கி பரிமாற்றங்கள் போன்ற பல்வேறு கருவிகளைப் பாவித்து பிரசைகள் அரசாங்கத்திற்கு கட்டணங்களை செலுத்த முடியும்.

**விசேட நோக்கங்கள் :**

1. பல்வேறான நிதி முகாமைத்துவ தீர்வுகளுடன் பொதுவான ஒரு தளத்தில் அரச சேவைகள் பலவற்றிற்கான கட்டணங்களை செலுத்துவதற்குப் பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு "வன் ஸ்டொப் சொப்" (one stop shop) ஒன்றினை நிர்மாணித்தல்.
2. சிறந்த கட்டுப்பாட்டுடனும் மிகச் சரியாகவும் பாதுகாப்பான வெளிப்படைத்தன்மையுடனும் பிரசைகளிடமிருந்து கட்டணங்களை வசூலிப்பதற்கான வசதிகளை அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
3. அரசாங்க டிஜிட்டல் மூலோபாயத்தில் குறிப்பிட்டுள்ளபடி தரவு உந்துதல் செயன்முறை மற்றும் பகுப்பாய்வு அடிப்படையிலான முடிவுகளை மேற்கொள்ள ஆதரவு அளித்தல்.
4. அரச நிறுவனங்களின் செயற்திறனை மேம்படுத்தி அதன்மூலம் பொதுமக்களுக்கு குறைந்த செலவு மற்றம் காலப்பகுதியில் பயனுள்ள முறையிலான சேவைகளை வழங்கல்.

### 1.6.2. இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளத் திட்டம் (SLUDI)

**அறிமுகம்**

இத்திட்டத்தின் நோக்கமானது 15 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய இலங்கைப் பிரசைகள் அனைவருக்கும் முழுமையான உயிர்ம திறன்களுடனான (கருவிழி, முகம் மற்றும் கைரேகை அங்கீகாரம்) நம்பகமானதும் தனித்துவமானதும் பாதுகாப்பானதும் துல்லியமானதுமான டிஜிட்டல் அடையாள முறைமையினை நிர்மாணிப்பதுவே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு குடிமகனினதும் உயிர்மான விபரங்களானது கடவுச்சீட்டு ,சாரதி அனுமதிப்பத்திரம், சமூக நலன்புரி சலுகைகள் மற்றும் வரி செலுத்துதல் என்பவற்றிற்கு உதவுவதோடு இவ்விபரங்கள் யாவும் UDI இல் பதிவு செய்யப்படும். இவை ஸ்கேனிங் இயந்திரங்கள் மூலமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நிகழ்நிலையில் படிக்க முடியும். இதனால் அரச சேவைகளை துரிதப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

விபத்து ஒன்று ஏற்படுமிடத்து பாதிக்கப்ட்டவரின் மருத்துவ குறியீடுகளை மருத்துவ மனைகள் இலகுவாக அணுகுவதற்கு UDI பயன்படும். அத்துடன் சட்ட விரோத குடியேற்றவாசிகள், குற்றவாளிகளைக் கண்காணிக்கவும் திருட்டு மற்றும் மோசடிகளை தடுக்கவும் அரசுக்கு உதவும்.

இலங்கை தனித்துவ அடையாள அட்டை (SLUDI) இன் மூலம் இலங்கைப் பிரசைகளின் அடையாளத்தின துல்லியமாகவும் செயற்திறனாகவும் உறுதி செய்து கொள்ள உதவும்.

தனிப்பட்ட தரவுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் தனிநபர் அடையாளங்களை சரிபார்த்தல், சான்றுப்படுத்தல் என்பவற்றிற்கான பொறிமுறைகளைத் தயாரிப்பதன் மூலம் சகல இலங்கைப் பிரசைகளும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதனை சாத்தியமாக்கல்.

**நோக்கங்களும் இலக்குகளும்**

15 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல இலங்கைப் பிரசைகளுக்கும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO), உயிர்மான மற்றும் சர்வதேச தரத்திலான புகைப்படங்கள் அடங்கிய தனிப்பட்ட தரவுகளை சேகரித்து பொதுவான தரவுத் தளமாக தேசிய ஆட்பதிவு பதிவேட்டினை (NRP) தாபித்தல்.

15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட சகல இலங்கைப் பிரசைகளுக்கும் தனித்துவ அடையாள அட்டையினை வழங்குவதன் மூலம் பிரசைகளின் அடையாளத்தினத் துல்லியமாக சான்றுப்படுத்த முடியும்.

மத்திய தரவுத் தளத்தில் உள்ள தகவல்களை சாத்தியமான நிறுவனங்களுடன் பகிர்நது கொள்வதற்கான சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தரவு பரிமாற்ற கொள்கைளை நிறுவுதல்.

தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான வேலைத்திட்டங்களுக்கான வசதிகளை வழங்கல்.

### 1.6.3. தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2023-2030

அமைச்சானது உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் தேசிய டிஜிட்டல் பொருரளாளதார மூலோபாயம் 2023-2030 இனைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. கௌரவ பிரதமரின் செயலாளர் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு மற்றும் ஆறு கருப்பொருள் பணிக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அக் கருப்பொருள் பிரிவுகள் பின்வருமாறு:

- புரோட்பேன்ட் (Broadband) இணைப்பு , பயன்பாடு மற்றும் அணுகல்
- திறன்கள், புலமை, துறைகள் மற்றும் தொழில்கள்
- இணைக்கப்பட்ட டிஜிட்டல் அரசாங்கம்
- டிஜிட்டல் பாதுகாப்பு
- டிஜிட்டல் நிதிச் சேவைகள்
- முக்கிய பொருளாதாரத் துறைகளை டிஜிட்டல் மயமாக்கல்

### 1.6.4. டிஜிகொன் - DigiEcon (சர்வதேச மாநாடும் கண்காட்சியும்)

புத்தாக்கமான தகவல் தொழில்நுட்பம் தொடர்பன உற்பத்திகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்தலும், சுகாதாரம், கல்வி, விவசாயம், போக்குவரத்து , சுற்றுலா, விளையாட்டு, கப்பல் மற்றும் விமான சேவைகள், வர்த்தகம், புடவை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக ஏனைய முக்கிய துறைகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதே இதன் நோக்கமாகும். இத் தளமானது உள்ளூர் மற்றும் சர்வதேச தலைவர்கள், துறை வல்லுநர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிறந்த

நடைமுறைகள் மற்றும் சம்பவ கற்கை, சக கற்கை பற்றிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை முன்வைக்கின்றது. அத்துடன், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கும் உற்பத்தித் திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், உள்ளூர் தொழிற்துறை மற்றும் தொழிற்துறை தலைவர்களுடன் வலையமைப்பினை ஏற்படுத்துவதற்கான சிறந்த சர்வதேச செயன்முறைகளை கொண்டு வருகின்றது. டிஜிட்டல் பரிமாற்றம் மற்றுடம் டிஜிட்டல் பொருளாதாரத்தினை விரைவுபடுத்துவதற்கான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பினை தாபிப்பதற்கும் உதவுகிறது.

### 1.6.5. தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை

தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினை அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. பணிப்பாளர் சபை நியமனங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால கண்ணோட்டமும்

## 2.1 அரசாங்க டிஜிட்டல் கட்டண முறைமை (GDPS)

**தற்போதைய முன்னேற்றம்**

தொழில்நுட்ப செயலாற்றுக் குழ நிறுவப்பட்டது. நிகழ்நிலை கட்டணங்களை இலகுபடுத்தும் பொருட்டு லங்கா பே (Lanka Pay) ஆனது பொதுவான தீர்வொன்றினை வழங்கியுள்ளதோடு, வழிகாட்டல் வரைபானது மேம்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதற் கட்டமாக தெரிவுசெய்யப்பட்ட 14 நிறுவனங்களில் முன்னோடித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படும்.

1. நில அளவைத் திணைக்களம்
2. அணுசக்தி பணியகம்
3. தொழிற் பயிற்சி அதிகாரசபை
4. பிரதேச செயலகம் - கேகாலை
5. பிரதேச செயலகம் - இரத்மலானை
6. பிரதேச செயலகம் - திம்பிரிகஸ்யாய
7. பிரதேச சபை – ரம்புக்கன
8. நகர சபை – கம்பஹா
9. இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
10. பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்
11. மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
12. பிரதேச செயலகம் - மஹர
13. ஆயுர்வேத திணைக்களம்
14. துறைமுக அதிகார சபை

முன்னோடித் திட்டம் 2023 ஒக்டோபர் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிறுவனங்களின் அலுவலர்களுக்கான பயிற்திட்டம் SLIDA வில் நடைபெற்றது. இத்திட்டத்தின் அனுபவங்களின் அடிப்படையில் அது வேறு நிறுவனங்களுக்கிடையிலும் கொண்டு செல்லப்படும்.

## 2.2. இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளம் (SLUDI)

**தற்போதைய முன்னேற்றம்**

அடையாள கட்டமைப்பிற்கான ஒருங்கிணைப்பாளருக்கான (MSI) பெறுகைப் பணிகள் - இரண்டு ஏலங்கள் மட்டுமே பெறப்பட்டன. அவை பதிலளிக்காததன் காரணமாக CAPC இனால் நிராகரிக்கப்பட்டன. மேலும் அவை மேலதிக மதிப்பீட்டிற்கும் தகுதியற்றவையாகக் காணப்பட்டன.

## 2.3. தரவுப் பாதுகாப்பு அதிகாரசபை

தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையினை நிறுவுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. பணிப்பாளர் சபை நியமனங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

## 2.4. இணையப் பாதுகாப்பு சட்டம்

சட்ட வரைபு தயாரிக்கப்பட்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு (LDD) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பொதுமக்கள் கலந்தாய்வு நடத்தப்பட்டது. இவ் ஆலோசனையில் பெறப்பட்ட கருத்துகள் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரு வாரங்களில் சட்ட வரைபானது சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

## 2.5. தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் 2023-2030

அமைச்சானது உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் தேசிய டிஜிட்டல் பொருரளாளதார மூலோபாயம் 2023-2030 இனைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. கௌரவ பிரதமரின் செயலாளர் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு (High Level Officers Committee – HLOC) மற்றும் ஆறு கருப்பொருள் பணிக்குழுக்கள் (Thematic Working Groups – TWGs) நியமிக்கப்பட்டுள்ளன. அக் கருப்பொருள் பிரிவுகள் பின்வருமாறு:

- புரோட்பேன்ட் இணைப்பு , பயன்பாடு மற்றும் அணுகல்
- திறன்கள், புலமை, துறைகள் மற்றும் தொழில்கள்
- இணைக்கப்பட்ட டிஜிட்டல் அரசாங்கம்
- டிஜிட்டல் பாதுகாப்பு
- டிஜிட்டல் நிதிச் சேவைகள்
- முக்கிய பொருளாதாரத் துறைகளின் டிஜிட்டல் மயமாக்கல்

HLOC,TWGs, உலக வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் இணைந்து வரைவு அறிக்கையினை தயாரித்துள்ளனர். பொதுமக்களுக்கான கலந்தாலோசனை நடத்தப்பட்டு வருகிறது. 2023 நவம்பர் தொடக்கத்தில் இப்பணி நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.6. டிஜிகொன் - (சர்வதேச மாநாடும் கண்காட்சியும்)

புத்தாக்கமான தகவல் தொழில்நுட்பம் தொடர்பன உற்பத்திகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்தலும், சுகாதாரம், கல்வி, விவசாயம், போக்குவரத்து , சுற்றுலா, விளையாட்டு, கப்பல் மற்றும் விமான சேவைகள், வர்த்தகம், புடவை மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக ஏனைய முக்கிய துறைகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதே இதன் நோக்கமாகும். இத் தளமானது உள்ளூர் மற்றும் சர்வதேச தலைவர்கள், துறை வல்லுநர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிறந்த நடைமுறைகள் மற்றும் சம்பவ கற்கை, சக கற்கை பற்றிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை முன்வைக்கின்றது. அத்துடன், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கும் உற்பத்தித் திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்த உதவுகின்றது. மேலும், உள்ளூர் தொழிற்துறை மற்றும் தொழிற்துறை தலைவர்களுடன் வலையமைப்பினை ஏற்படுத்துவதற்கான சிறந்த சர்வதேச செயன்முறைகளை கொண்டு வருகின்றது. டிஜிட்டல் பரிமாற்றம் மற்றுடம் டிஜிட்டல் பொருளாதாரத்தினை விரைவுபடுத்துவதற்கான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பினை தாபிப்பதற்கும் உதவுகிறது.

2023 தொடர்ச்சியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்ட்டன.

- DIGIECON இணையத்தளமானது 30 மார்ச் 2023 இல் ஆரம்பிக்கப்பட்டது.
- பின்வரும் நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன மற்றும் நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளன.

| Index | Event Name | Event Nature | Location | Duration |
|---|---|---|---|---|
| 1 | DIGIECON 2030 - Main event | இலங்கை டிஜிட்டல் பிரமாண்ட திறப்பு விழா | Shangri-La | 11th October 2023 |
| 2 | NITC(National Information Technology Conference) | பொருளாதார பெருந்திட்டமும் கொள்கை கட்டமைப்பு மாநாடு | Shangri-La | 11th to 13th October 2023 |
| 3 | National ICT Career Fair | தொழிற் சந்தை | BMICH | 11th to 13th October 2023 |
| 4 | Digital Investment Summit | முதலீட்டு மாநாடு | Shangri-La | 13th October 2023 |
| 5 | TECHNO | கண்காட்சி | BMICH | 20th to 22nd October 2023 |
| 6 | NBQSA (National Best Quality Software Awards) | விருதுகள் | Grand Monarch | 25th October 2023 |
| 7 | NERDC Symposium | கருத்தரங்கம் | Water's Edge | 2nd November 2023 |
| 8 | INFOTEL | கண்காட்சியும் தேசிய கல்வி மன்றமும் | BMICH | 3rd to 5th November 2023 |

# அத்தியாயம் 03: நிதி முன்னேற்றம்

## 3.1 நிதி முன்னேற்ற அறிக்கை

ACA -F

### Statement of Financial Performance
### for the period ended 31st December 2023

| Revised Budget Allocations 2023 Rs. | | Note | Actual 2023 Rs. | Actual 2022 Rs. | |
|---|---|---|---|---|---|
| - | **Revenue Receipts** | | | | |
| - | Income Tax | 1 | - | 16,755,636,726 | ACA-1 |
| 22,000,000,000 | Taxes on Domestic Goods & Services | 2 | 19,182,056,557 | - | ACA-1 |
| - | Taxes on International Trade | 3 | - | | ACA-1 |
| - | Non Tax Revenue & Others | 4 | 6,500,000 | 1,441,442 | ACA-1 |
| 22,000,000,000 | **Total Revenue Receipts (A)** | | 19,188,556,557 | 16,757,078,168 | |
| - | **Non Revenue Receipts** | | - | | |
| - | Treasury Imprests | | 2,201,309,000 | 1,870,383,000 | ACA-3 |
| - | Deposits | | 13,286,624 | 10,100 | ACA-4 |
| 800,000 | Advance Accounts | | 1,674,236 | 942,794 | ACA-5 |
| - | Other Main Ledger Receipts | | | | |
| 800,000 | **Total Non Revenue Receipts (B)** | | **2,216,269,860** | 1,871,335,894 | |
| | **Total Revenue Receipts & Non Revenue Receipts C = (A)+(B)** | | **21,404,826,417** | 18,628,414,062 | |
| | **Remittance to the Treasury (D)** | | **6,500,000** | - | |
| 22,000,800,000 | **Net Revenue Receipts & Non Revenue Receipts E = (C)-(D)** | | **21,398,326,417** | 18,628,414,062 | |
| | **Less: Expenditure** | | | | |
| - | **Recurrent Expenditure** | | | | |
| 55,180,000 | Wages, Salaries & Other Employment Benefits | 5 | 42,017,327 | 23,087,957 | ACA-2(ii) |
| 4,798,618,000 | Other Goods & Services | 6 | 1,252,018,412 | 49,950,929 | ACA-2(ii) |
| 843,202,000 | Subsidies, Grants and Transfers | 7 | 578,906,778 | 934,108,322 | ACA-2(ii) |
| - | Interest Payments | 8 | - | - | ACA-2(ii) |
| - | Other Recurrent Expenditure | 9 | - | - | ACA-2(ii) |
| 5,697,000,000 | **Total Recurrent Expenditure (F)** | | **1,872,942,517** | 1,007,147,208 | |
| | **Capital Expenditure** | | | | |
| 21,600,000 | Rehabilitation & Improvement of Capital Assets | 10 | 6,695,156 | 4,051,813 | ACA-2(ii) |
| 20,400,000 | Acquisition of Capital Assets | 11 | 2,575,593 | 5,849,020 | ACA-2(ii) |
| 1,600,000,000 | Capital Transfers | 12 | 319,608,621 | 1,194,501,042 | ACA-2(ii) |
| - | Acquisition of Financial Assets | 13 | - | | ACA-2(ii) |
| 1,000,000 | Capacity Building | 14 | 425,500 | 196,820 | ACA-2(ii) |
| 200,000,000 | Other Capital Expenditure | 15 | 83,800 | 215,005,080 | ACA-2(ii) |
| 1,843,000,000 | **Total Capital Expenditure (G)** | | **329,388,669** | 1,419,603,775 | |
| - | Deposit Payments | | 13,032,721 | 13,200 | ACA-4 |
| 3,000,000 | Advance Payments | | 1,861,617 | 2,250,435 | ACA-5 |
| - | Other Main Ledger Payments | | | - | |
| 3,000,000 | **Total Main Ledger Expenditure (H)** | | **14,894,338** | **2,263,635** | |
| 7,543,000,000 | **Total Expenditure I = (F+G+H)** | | 2,217,225,525 | 2,429,014,618 | |
| | **Balance as at 31st December J = (E-I)** | | 19,181,100,892 | 16,199,399,444 | |
| | **Balance as per the Imprest Adjustment Statement** | | 19,181,100,892 | 16,199,399,444 | ACA-7 |
| | **Imprest Balance as at 31st December** | | - | - | ACA-3 |
| | | | 19,181,100,892 | 16,199,399,444 | |

## 3.2 நிதி நிலைமை அறிக்கை

ACA-P

### Statement of Financial Position
### As at 31st December 2023

| | Note | Actual 2023 Rs | 2022 Rs |
|---|---|---|---|
| **Non Financial Assets** | | | |
| Property, Plant & Equipment | ACA-6 | 36,810,333 | 713,569,740 |
| **Financial Assets** | | | |
| Advance Accounts | ACA-5/5(a) | 8,787,363 | 3,342,542 |
| Cash & Cash Equivalents | ACA-3 | - | - |
| **Total Assets** | | **45,597,696** | **716,912,282** |
| **Net Assets / Equity** | | | |
| Net Worth to Treasury | | 3,251,019 | 3,317,542 |
| Property, Plant & Equipment Reserve | | 36,810,333 | 713,569,740 |
| Rent and Work Advance Reserve | ACA-5(b) | 5,257,440 | - |
| **Current Liabilities** | | | |
| Deposits Accounts | ACA-4 | 278,903 | 25,000 |
| Unsettled Imprest Balance | ACA-3 | - | - |
| **Total Liabilities** | | **45,597,696** | **716,912,282** |

Detail Accounting Statements in ACA format Nos. 1 to 07 presented in pages from 6 to 29 and Annexures to accounts presented in pages from 30 to 45 form an integral part of these Financial Statements. The Financial Statements have been prepared in complying with the Generally Accepted Accounting Principles whereas most appropriate Accounting Policies are used as disclosed in the Notes to the Financial Statements and hereby certify that figures in these Finacial Statements, Notes to accounts and other relevant accounts were reconciled with the Treasury Books of Accounts and found in agreement.

We hereby certify that an effective internal control system for the financial control exists in the Reporting Entity and carried out periodic reviews to monitor the effectiveness of internal control system for the financial control and accordingly make alterations as required for such systems to be effectively carried out.

| Chief Accounting Officer | Accounting Officer | Chief Financial Officer/ ~~Chief Accountant/~~ ~~Director (Finance)~~/ Commissioner (Finance) |
|---|---|---|
| Name : | Name : | Name : |
| Designation : | Designation : | |
| Date : 27/02/2024 | Date : 27/02/2024 | Date : 26.02.2024 |
| Dr. Dharmasri Kumaratunge<br>Secretary<br>Ministry of Technology | Dr. Dharmasri Kumaratunge<br>Secretary<br>Ministry of Technology | K.D. Dileepa Rathnayake<br>Cheif Financial Officer<br>Ministry of Technology |

2

## 3.3 காசுப் பாய்ச்சல் அறிக்கை

ACA-C

### Statement of Cash Flows
### for the Period ended 31st December 2023

| | Actual 2023 Rs. | Actual 2022 Rs. |
|---|---|---|
| **Cash Flows from Operating Activities** | | |
| Total Tax Receipts | - | - |
| Fees, Fines, Penalties and Licenses | - | - |
| Profit | - | - |
| Non Revenue Receipts | - | 1,441,442 |
| Revenue Collected on behalf of Other Revenue Heads | 1,648,447 | - |
| Imprest Received | 2,201,309,000 | 1,870,383,000 |
| Recoveries from Advance | 1,735,853 | 938,454 |
| Deposit Received | 13,286,624 | 10,100 |
| **Total Cash generated from Operations (A)** | **2,217,979,925** | **1,872,772,996** |
| ***Less - Cash disbursed for:*** | | |
| Personal Emoluments & Operating Payments | 1,293,794,639 | 72,940,736 |
| Subsidies & Transfer Payments | 578,906,778 | 644,108,322 |
| Expenditure incurred on behalf of Other Heads | 995,500 | 5,349,158 |
| Imprest Settlement to Treasury | 6,500,000 | - |
| Advance Payments | 1,861,617 | 1,160,889 |
| Deposit Payments | 13,032,721 | 13,200 |
| **Total Cash disbursed for Operations (B)** | **1,895,091,255** | **723,572,304** |
| **NET CASH FLOW FROM OPERATING ACTIVITIES(C )=(A)-(B)** | **322,888,669** | **1,149,200,691** |
| **Cash Flows from Investing Activities** | | |
| Interest | - | - |
| Dividends | - | - |
| Divestiture Proceeds & Sale of Physical Assets | - | - |
| Recoveries from On Lending | - | - |
| **Total Cash generated from Investing Activities (D)** | - | - |
| ***Less - Cash disbursed for:*** | | |
| Capital Expenditure | 329,388,669 | 1,149,200,691 |
| **Total Cash disbursed for Investing Activities (E)** | **329,388,669** | **1,149,200,691** |
| **NET CASH FLOW FROM INVESTING ACTIVITIES( F)=(D)-(E)** | **(329,388,669)** | **(1,149,200,691)** |
| **NET CASH FLOWS FROM OPERATING & INVESTMENT ACTIVITIES (G)=( C) + (F)** | **(6,500,000)** | **0** |
| **Cash Flows from Fianacing Activities** | | |
| Local Borrowings | - | - |
| Foreign Borrowings | - | - |
| Grants Received | 6,500,000 | - |
| **Total Cash generated from Financing Activities (H)** | **6,500,000** | - |
| ***Less - Cash disbursed for:*** | | |
| Repayment of Local Borrowings | - | - |
| Repayment of Foreign Borrowings | - | - |
| **Total Cash disbursed for Financing Activities (I)** | - | - |
| **NET CASH FLOW FROM FINANCING ACTIVITIES (J)=(H)-(I)** | **6,500,000** | - |
| **Net Movement in Cash (K) = (G) + (J)** | - | - |
| **Opening Cash Balance as at 01st January** | - | - |
| **Closing Cash Balance as at 31st December** | - | - |

3

## 3.4 நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்

இல்லை

## 3.5 வருமான சேகரிப்பின் முன்னேற்றம்

ருபா

| வருமான குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்ட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | உண்மையான | இறுதி | இதொகை (ருபா) | இறுதி வருமான மதிப்பீட்டின் % |
| 1002.11.00 | தொலைபேசி வாடிக்கையாளர் வரி | 20,000,000,000 | 20,000,000,000 | 17,304,005,581 | 86.52% |
| 1002.14.00 | செலியூலர் கோபுர வரி | 1,500,000,000 | 1,500,000,000 | 1,630,777,873 | 108% |
| 1002.15.00 | SMS விளம்பர வரி | 500,000,000 | 500,000,000 | 247,272,102 | 49% |

## 3.6. நிதி ஒதுக்கீட்டின் பயன்பாட்டு முன்னேற்றம்

ருபா

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் பயன்பாட்டு விகிதம் % |
|---|---|---|---|---|
| | உண்மையான | இறுதி | | |
| **மீண்டெழும்** | 5,498,000,000 | 5,498,000,000 | 1,872,942,517 | 34% |
| **மூலதனம்** | 1,800,000,000 | 1,843,000,000 | 329,388,670 | 18% |

## 3.7 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**தொழில்நுட்ப அமைச்சின் 2023 டிசம்பர் 3 ஆம் திகதிக்கு முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்று அறிக்கை தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) <u>உறுப்பரையின்படி கணக்காய்வாளர் அதிபதியின் சாராம்ச அறிக்கை</u>**

### 1. நிதி அறிக்கை

#### 1.1 கருத்து

**தலைப்பு** – 186, தொழில்நுட்ப அமைச்சின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமை அறிக்கையின்படி, அத் தினத்திற்கு முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்றிறன் அறிக்கை மற்றும் நிதிப் பாய்ச்சுகை அறிக்கை, பிரமாண கணக்கியல் கொள்கைகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றானது , 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் நடைமுறைகளுடன் இணைந்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) யாப்பில் உள்ளடக்கப்பட்ட விதிமுறைகளின்படி எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) உறுப்புரையின்படி தொழில்நுட்ப அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந்நிதி அறிக்கை தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரையுடன் இணைந்து வாசிக்கக்கூடிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டததின் 10 ஆம் உறுப்புரையின்படி சமர்ப்பிக்கப்படவேண்டிய கணக்காய்வு அறிக்கையானது எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தொழில்நுட்ப அமைச்சின் நிதிக் கூற்றுக்களின்படி 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத் தினத்திற்கு முடிவடையும் ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சுகை அறிக்கையானது பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கணக்கியல் அடிப்படைகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையினை எடுத்துக்காட்டும் என்பது எனது கருத்தாகும்.

#### 1.2 கருத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரங்களுக்கு (இ.க.த.) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்திற்கு அடிப்படையான ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெறப்பட்ட கணக்காய்வு சாட்சிகள் போதுமானவையும் பொருத்தமானவையுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

#### 1.3 நிதி அறிக்கை தொடர்பாக பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் மற்றும் கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியதிகளிற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை எடுத்துக் காட்டும்படியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது மற்றும் மோசடி , பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய பிரமாண பொய்யான கூற்றுக்கள் இன்றி நிதி அறிக்கையினை தயாரிக்கத் தேவையான உள்ளக நிர்வாகத்தினை தீர்மானிப்பது பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உறுப்புரையின்படி அமைச்சினால் வருடாந்த மற்றும் நடப்பு நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்க முடியுமான வகையில் சொந்த வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பற்றுக்கள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப உறுப்பரையின்படி அமைச்சின் நிதி நிர்வாகத்திற்கு பலனுள்ள உள்ளக நிர்வாக கட்டமைப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்துவதோடு அக்கட்டமைப்பின் பலன்கள் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி கட்டமைப்பினை செயற்றிறன் மிக்கதாகக் கொண்டு நடத்தத் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக்கூற்றானது, மோசடி மற்றும் பிழைகள் காரணமாக பிரமாண தவறான தகவல்கள் அற்றது என்பதாக நியாயமான உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொடுப்பது மற்றும் எனது கருத்து உள்ளடங்கலான கணக்காய்வு அறிக்கையினை வழங்குவதே எனது நோக்கமாகும். பொதுவான உறுதிப்படுத்தலானது உயர் மட்ட உறுதிப்படுத்தலாக கருதப்பட்டாலும், இலங்கை கணக்காய்வுத் தரங்களின் அடிப்படையில் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பிரமாண தவறான அறிக்கையினை வெளிக்கொணரும் என்பதனை உறுதிப்படுத்த முடியாது.

மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கம் செலுத்துவதன் காரணமாக பிரமாண தவறான அறிக்கைகள் ஏற்படக்கூடுமென்பதோடு, அதன் அளவீட்டுத் தன்மையானது இந்த நிதிக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பயனாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்களில் காணப்படும் தாக்கங்களில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வுத் தரங்களுக்கு அமைவாக கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின்போது தொழில்சார் தர்மம் மற்றும் தொழில்சார் அமைவுகளின்படி செயலாற்றப்பட்டது. மேலும், என்னால்

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு கருத்திற்கு அடிப்படையினை வழங்கும்போது மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பிரமாண தவறான தகவல்கள் ஏற்படுவதை அடையாளம் காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறாக காட்டுதலினால் ஏற்படக்கூடிய பிரமாண தவறான அறிக்கைகளினால் ஏற்படக்கூடிய தாக்கத்தினை விடவும் மோசடியினால் ஏற்படக்கூடிய தாக்கமானது தவறான கூட்டணி, பொய்யான ஆவணங்களின் தயாரிப்பு, வேண்டுமென்றே தவறவிடல், பிழையாக காண்பித்தல் அல்லது உள்ளக நிர்வாகத்தினை தவறவிடல் போன்ற காரணிகளால் செல்வாக்கு செலுத்துகிறது.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்கள் தொடர்பான கருத்தொன்றினை வெளிப்படுத்தும் நோக்கில் அல்லாதுவிடினும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறையினை திட்டமிடுவதற்கு உள்ளக நிர்வாகம் தொடர்பான அறிவு பெறப்பட்டது.
- வெளிப்படுத்தல் அடங்கலான நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் பாராட்டப்பட்டது.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்ப மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டமை மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதி அறிக்கைகளின் சமர்ப்பிப்பு பாராட்டப்பட்டது.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட பிரதான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளக நிர்வாக பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) உறுப்புரையின்படி நிதிக்கூற்றானது கடந்த வருடத்துடன் தொடர்புடையதாக உள்ளமையினை நான் வெளிப்படுத்துகிறேன்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

(அ) நிதி ஏற்பாடு 50 (ii) மற்றும் (iii) இன்படி செலவின மதிப்பீட்டினை தயாரிக்கும்போது முடிந்தவரையில் முழுமையானதாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், திட்டமிடல் மற்றும் செயற்றிறன் தொடர்பில் சரியான கவனத்துடன் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தலானது பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலரின் பொறுப்பெனினும், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் ஏ.சி.ஏ. 02 இல் காண்பிக்கப்பட்ட ருபா. 7,540,900,000 இற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவின ஒதுக்கீட்டின் நூற்றிற்கு 70.7 அல்லது ருபா.5,337,668,814 மிகுதியாகக் காணப்பட்டது.

(ஆ) தேவைகளை சரியாக அடையாளம் கண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததனால் இல. 01 இல் இரண்டு செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ருபா. 1,250,000 இற்கான நிதியானது முழுமையாக மிகுதியாகக் காணப்பட்டதுடன், 17 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ருபா. 151,040,000 இற்கான ஒதுக்கீட்டில் நூற்றிற்கு 26.6 இலிருந்து நூற்றிற்கு 98.3 இற்கான இடைவெளியின் கூட்டுத்தொகையாக ருபா.75,592,585 மிகுதியாகக் காணப்பட்டது.

(இ) அமைச்சின் இல. 02 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக மீளாய்வு ஆண்டில் ஒதுக்கப்பட்ட ருபா. 7,298 மில்லியுன்களுக்கான முழுத்தொகையில் வருடத்திற்குள் செலவழிக்கப்ட்ட தொகையாக ருபா. 2,071.7 காணப்பட்டதுடன், ருபா. 5,226,.3 அல்லது முழு நிதி ஒதுக்கீட்டில் நூற்றிற்கு 71.6 மிகுதியாகக் காணப்பட்டது.

(ஈ)அமைச்சின் மீளாய்விற்கான வருடத்தின் மொத்த மீண்டெழும் செலவினமானது ருபா.1,872,942,517 ஆகும். அச்செலவின் நூற்றிற்கு 70.41 அதாவது ருபா.1,318,753,785 ஆனது டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளின் பராமரிப்பு, ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் செலவிடப்பட்டிருநததுடன் அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் நூற்றிற்கு 16 அதாவது ருபா.314,586,256 தொகையானது அந்நிறுவனத்தின் சம்பளத்திற்காகச் செலவிடப்பட்ட தொகையாகும். மேலும், டிசம்பர் 31 இற்கு செலுத்தப்படவேண்டிய பிணைகளின் பெறுமதியானது செலவிடப்பட்ட மீண்டெழும் செலவினத்தினை விடவும் உயர்வடைந்து ருபா.1,760,789,464 ஆக பற்றுச்சீட்டுகள் கிடைக்கப்பெற்றன. மொத்த மீண்டெழும் செலவினத்தின் ருபா.118,685,583 அல்லது நூற்றிற்கு 6 விகிதமானது இலங்கை கணனி அவசர பதிலளிப்பு ஒன்றியத்தின் சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழுமெ செலவினமாக அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவினத்தின் தொகையானது நூற்றிற்கு 93.5 இவ்விரு நிறுவனங்களுக்கும் செலவிடப்பட்டிருந்தது..

(ஊ) தொழில்நுட்ப அமைச்சின் மீளாய்வ வருடத்திற்கான மொத்த மீண்டெழும் செலவினமான ருபா. 329,388,669 இற்கான தொகையில் ருபா.61,324,214 மற்றும் ருபா.258,368,207 ஆனது முறையே இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் இலங்கை கணனி அவசர பதிலளிப்பு ஒன்றியத்தின் மூலதன செலவாகக் காணப்பட்டதுடன் அது நூற்றிற்கு 97 சதவீதமாக காணப்பட்டது. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீண்டெழும் செலவினத்திற்கு ஒப்பீட்டளவில் மூலதன செலவினத்தின் வீதமானது நூற்றிற்கு 3 ஆக குறைந்தளவில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

### 3.1.1 பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

(அ) இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் செயற்படுத்தும் Lanka Government Network 2.0 வேலைத்திட்டத்தின் மூலம் 860 நிறுவனங்களில் இணையத் தொடர்பிற்கான வசதிகளை ஏற்படுத்தப்பட்டு செயற்பட்டு வருவதுடன் ஏற்கனவே இருந்த கருத்திட்டங்களின் தற்போதைய செயற்பாடுகளை பரிசோதிப்பதற்காக 2023 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி பெறப்பட்ட அறிக்கையின்படி வலையமைப்பு வசதிகள் வழங்கப்பட்ட 855 நிறுவனங்களில் 760 நிறுவனங்கள் மட்டுமே அவ்வலையமைப்பு வசதிகளை செயற்படுத்திவருவதோடு, 100 நிறுவனங்கள் செயற்படாமலோ, உபயோகிக்காமலோ உள்ளதாக தரவுகள் பெறப்பட்டன. இவ்வசதிகளுக்காக மீளாய்வு வருடத்தில் மட்டும் பராமரிப்பு செலவாக ருபா. 681,968,305 இற்கான தொகை அரச நிதியத்திலிருந்து செலவழிக்கப்பட்டிருப்பினும் இவ்வசதிகள் செயற்திறனான முறையில் உபகோகிக்ககப்பட்டு வருகின்றனவா என்பது தொடர்பில் அமைச்சானது பின்னூட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 09 நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரொபோ தொழில்நுட்பத்திற்கான விசேட நிலையமானது (Centre of Excellence in Robotic Application) நிர்மாணிப்பதற்கு அப்போதைய கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் மூலம் ருபா. 189,909,295 செலவில் நிர்மாணப் பணிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்யவும், ரொபோ தொழில்நுட்ப நிலையத்திற்கான 3000 சதுர அடி கொண்ட இரு கேட்போர்கூடங்களுக்கு 10 குளிருட்டல் இயந்திரங்களைப் பொருத்தி தரைக் கம்பளங்கள் விரிக்கப்பட்டு தரைத்தளத் திட்டம் (floor plan) தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்கு 2018 ஆம் ஆண்டில் ருபா. 40 மில்லியன்கள் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட Robert Arm இயந்திரத் திட்டமானது செயற்படுத்தப்படாமை காரணமாக மீளாய்விற்கான வருடத்திலும் உபயோகமற்று காணப்படுவதுடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் இத்திட்டத்தின் சில உபகரணங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருந்தன.

யூ.என். அலுத்கே
சிரேஷ்ட உதவி கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதிக்காக

# அத்தியாயம் 04 – முன்னேற்ற குறிகாட்டிகள்

## 4.1 நிறுவனத்தின் முன்னேற்ற குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டது)

| குறிப்பிட்ட குறிகாட்டிகள் | உண்மையான வெளியீடு எதிர்பார்க்கப்படும் சதவீதத்தில் (%) வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100%- 90%** | **75%-89%** | **50%- 74%** |
| சைபர் பாதுகாப்பு சட்டவரைபு | | * | |
| தேசிய டிஜிட்டல் பொருளாதார மூலோபாயம் | | * | |
| தேசிய இலத்திரனியல் கொடுப்பனவு திட்டம் | | * | |

## அத்தியாயம் - 05 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும்.

| இலக்கு ∴ நோக்கு | இலக்குகள் | குறிகாட்டிகள் | அடைவுகளின் முன்னேற்றம் இன்றுவரை | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50% - 74% | 75% - 100% |
| **இலக்கு 4 :** முழுமையானதும் நீதியானதுமான கல்வியை உறுதிப்படுத்தலும் அனைவருக்கும் வாழ்நாள் பூராகவும் கற்றலுக்கான சந்தர்ப்பத்தை உறுதி செய்தலும் | 4.4 2030களில் கண்ணியமான தொழில் மற்றும் தொழில் முனைவர்கள் தொடர்பாக தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்சார் தகுதிகள் உள்ளடங்கலாக தேர்ச்சி பெற்றுள்ள இளைஞர்கள் மற்றும் பெரியோர்களின் எண்ணிக்கையை கவனிக்கத்தக்களவில் அதிகரித்தல் | 4.4.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்களைக் கொண்ட இளைஞர்கள் மற்றும் பெரியோர்களின் எண்ணிக்கை | | ✓ | |
| **இலக்கு 9 :** உட்கட்டமைப்பு வசதிகளை வலுவான முறையில் கட்டியெழுப்புதல், முழுமையான மற்றும் நிலைபேறான தொழில்மயமாக்கலை மேம்படுத்தல் | 9.c 2020களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு பிரவேசிப்பதற்கான இயலுமையை விருத்திசெய்தல் மற்றும் குறை அபிவிருத்தி நாடுகளுக்கு குறைந்த விலையில், அனைவருக்கும் இணையத்தளத்தை அணுகுதலுக்கான சந்தர்ப்பமளித்தல். | 9.c.1 கையடக்கத் தொலைபேசி மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக உள்ளடக்கப்படுகின்ற சனத்தொகை விகிதாசாரம் | | ✓ | |
| **இலக்கு 17 :** வலுவாதார அபிவிருத்திக்கான உலகளாவிய பங்களிப்பினை உறுதி செய்வது, நடைமுறைப்படுத்துவது தொடர்பான வழிவகைகளை வலுப்படுத்தி, புத்துயிரளித்தல் | 17.6 வடக்கு-தெற்கு, தெற்கு-தெற்கு மற்றும் முக்கோண பிராந்தியம் மற்றும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பானது விஞ்ஞானம்,தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பவை தொடர்பில் அதிகரிக்கப்பட வேண்டியதுடன் ஒரு பரஸ்பர ஒப்பந்த விதிமுறைகளுக்கமைய அறிவு சம்பந்தமான பகிர்வு அதிகரிக்கப்படவேண்டும். அத்துடன் தற்போதுள்ள பொறிமுறையின் மத்தியில் மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பின் மூலம் முக்கியமாக ஐக்கிய நாடுகளின் நிலைக்கமையவும் மற்றும் உலக தொழில்நுட்ப அனுசரணையின் பொறிமுறைக்கேற்பவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். | 17.6.1 ஒத்துழைப்புக்களுக்கு அமைய, நாடுகளிடையே உள்ள விஞ்ஞான மற்றும்/அல்லது தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | | ✓ | |

# அத்தியாயம் 06 – மனித வள விபரக்குறிப்பு

## 6.1 ஆளணி முகாமைத்துவம்

| | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதுள்ள ஆளணி | வெற்றிடம் / (மேலதிகம்) மூழு |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 15 | 12 | 03 |
| மூன்றாம் நிலை | 01 | 00 | 01 |
| இரண்டாம் நிலை | 40 | 29 | 11 |
| வேறு | 01 | 01 | 00 |

## அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

| இல. | பொருந்தக்கூடிய தேவைகள் | இணக்க நிலை (இணங்கியது /இணங்கவில்லை) | இணங்காததற்கான சுருக்கமான விளக்கம் | எதிர்காலத்தில் இணக்கமின்மையைத் தவிர்க்க முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கைகள |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதியியல் அறிக்கைகள் கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டது.** | | | |
| 1.1 | வருடாந்த நிதியியல் அறிக்கைகள் | இணக்கம் காணப்பட்டது | | |
| 1.2 | அரச ஊழியர்களின் முற்பணக்கணக்கு | இணக்கம் காணப்பட்டது | | |
| 1.3 | வர்த்தகம் மற்றும் உற்பத்திக்கான முற்பணக கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு) | இணக்கம் காணப்படவில்லை | சம்பந்தப்படவில்லை | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கம் காணப்படவில்லை | சம்பந்தப்படவில்லை | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | இணக்கம் காணப்பட்டது | சம்பந்தப்படவில்லை | |
| 1.6 | ஏனையவை | இணக்கம் காணப்படவில்லை | | |
| 2 | **புத்தகங்கள் பதிவேடுகளின் பராமரிப்பு (நி.ஒ.445)/** | | | |
| 2.1 | நிலையான சொத்துப் பதிவேடு பொது நிர்வாக சுற்றிக்கை 267 2018 இன் விதிமுறைகளுக்கு அமைய பராமரிக்கப்பட்டு இற்றைப்ப டுத்தப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது | | |
| 2.2 | தனிப்பட்ட ஊதிய பதிவேடு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகள் பேணப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.3 | கணக்காய்வு வினவல்களுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.4 | கணக்காய்வு அறிக்கைகளுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.5 | சகல மாதாந்த கணக்கு சாரம்சங்களும் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்ட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளைகளுக்கான பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.7 | பொருட்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.8 | இருப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.9 | இழப்புக்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.10 | அர்ப்பணிப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 2.11 | அடிக்கற்றைகளுக்கான புத்தகங்களின் பதிவேடு (GA –N20) பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 03 | **நிதிக் கட்டுப்பாடுகளுக்கான பணிகளை ஒப்படைத்தல். (FR 135)** | இணக்கம் காணப்பட்டது. | | |
| 3.1 | நிறுவனத்திற்குள் நிதி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 3.2 | நிதி அதிகாரம் ஒப்படைப்பு செய்யப்பட்டு நிறுவனத்தினுள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 3.3 | ஓவ்வொரு பரிமாற்ற நடவடிக்கையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் ஊடாக நிறைவேற்றப்படும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது | இணக்கம் காணப்பட்டது. | | |
| 3.4 | இல.17 2004 மற்றும் 2014.05.11 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கையின்படி சம்பளப் பட்டியலுக்கான மென்பொருள் பொதியினைப் பாவித்து கட்டுப்பாடுகளை கணக்காளர்கள் பின்பற்றினர். | இணக்கம் காணப்பட்டது. | | |
| 4 | **வருடாந்த திட்டங்களை தயாரிப்பு** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டம் | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டது. | காணப்பட்டது. | | |
| 4.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் NBD இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 4.5 | வருடாந்த காசுப் பாய்ச்சுகை உரிய திகதியில் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **5** | **கணக்காய்வு வினவல்கள்** | | | |
| 5.1 | சகல கணக்காய்வு வினவல்களுக்கும் உரிய திகதியில் கணக்காய்வு அதிபரிடம் பதிலளிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **6** | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 6.1 | நிதி ஒழுங்குவிதிகள் 134(2) DMA/1-2019 இன்படி உள்ளக கணக்காய்வுத் திட்டமானது வருட ஆரம்பத்தில் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டது | இணக்கம் காணப்பட்டது. | | |
| 6.2 | சகல கணக்காய்வு வினவல்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 6.3 | தேசிய கணக்காய்வுச் சட்ட இல. 19 உம் 2018 இன் உப பிரிவு 40(4) இன்படி சகல கணக்காய்வு அறிக்கை பிரதிகளும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 6.4 | நி.ஒ. 134 (3) இன் விதிமுறைகளின்படி சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **7** | **கணக்காய்வு முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | கணக்கியல் முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை 1-2019 இன்படி ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவ கூட்டங்கள் நடத்தப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | சொத்து முகாமைத்து சுற்றிக்கை 01/2017 இன் 07 ஆம் பந்தியின் ஒழுங்குவிதிகளின்படி சொத்துக்களின் கொள்வனவு மற்றும் அகற்றல்கள் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 8.2 | ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக தகுதிவாய்ந்த இணைப்பாளர் ஒருவர் ஒழுங்குவிதிகளை செயற்படுத்தும் நோக்கில் நியமிக்கப்பட்டு அவரது விபரங்கள் மேற்குறிப்பிட்ட சுற்றரிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் கொம்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 8.3 | பொது நிதிச் சுற்றரிக்கை 05/2016 இன்படி ஆய்வுச்சபை அதன் அறிக்கையினை உரிய திகதியில் கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 8.4 | ஆய்வுச் சபையினால் வெளிப்படுத்தப்பட்ட மேலதிக மற்றும் பற்றாக்குறையானவை தொடர்பில் சம்பந்தப்பட்ட பரிந்துரைகயளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 8.5 | FR 772 இன் ஒழுங்குவிதிகளின்படி அகற்றப்படவேண்டிய கண்டனப்படுத்தப்பட்ட பொருட்கள் குறித்த காலப்பகுதிக்குள் அகற்றப்பட்டன. | இணக்கம் காணப்படவில்லை | | அகற்றப்படவேண்டிய அல்லது கண்டனப்படுத்தப்பட்ட வாகனங்கள் இல்லை |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | பொதுவில் இயங்கும் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அறிக்கைகள் மற்றும் மாதாந்த சாராம்சங்கள் உரிய திகதியில் கணக்காயவாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டன. | இணக்கம் காணப்படவில்லை | பொது வாகனங்கள் இல்லை | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் கிடைத்ததும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். |
| 9.2 | கண்டனப்படுத்தப்பட்ட வாகனங்கள் அவை கண்டனப்படுத்தப்பட்டு 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்பட்டன. | இணக்கம் காணப்படவில்லை | கண்டனப்படுத்தப்பட்ட வாகனங்கள் இல்லை | |
| 9.3 | வாகன பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | வாகனங்கள் இல்லை | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் கிடைத்ததும் மாதாந்த சாராம்ச அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.4 | F.R. 103, 104,109 மற்றும் 110 இன்படி ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பாகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | இணக்கம் காணப்படவில்லை | வாகனங்கள் இல்லை | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் கிடைத்ததும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 9.5 | அரசாங்க நிர்வாக சுற்றிக்கை இல 30/2016 இன் 29.12.2016ஆம் திகதியின் 3.1 ஆம் பந்தியின்படி வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீள பரிசோதனை செய்யப்பட்டன. | இணக்கம் காணப்படவில்லை | வாகனங்கள் இல்லை | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் கிடைத்ததும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| 9.6 | குத்தகைக்கு விடப்பட்ட வாகனங்களின் குத்தகைக் காலம் நிறைவடைந்ததும் அவற்றின் முழுமையான உரிமை தொடர்பில் பதிவேடுகள் மாற்றப்பட்டன. | இணக்கம் காணப்படவில்லை | வாகனங்கள் இல்லை | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் கிடைத்ததும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் |
| **10** | **வங்கிக் கணக்குகளின் முகாமைத்துவம்** | | | |
| 10.1 | வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுகள் உரிய தேதிக்குள் தயாரிக்கப்பட்டு, சான்றுப்படுத்தப்பட்டு கணக்காய்விற்கு தயாராக இருந்தது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 10.2 | வருடத்திற்குள் இருந்த செயல்படா கணக்குகள் மீளாய்வு செய்யப்பட்டோ அல்லது கடந்த வருடத்தில் தீர்க்கப்பட்டிருந்தது. | இணக்கம் காணப்படவில்லை | சேயற்படாத கணக்குகள் இல்லை | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட மிகுதிகள் தொடர்பாக அதற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதி ஒழுழங்குவிதிகளின் படி ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைக்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **11** | **ஏற்பாடுகளின் பயன்பாடு** | **இணக்கம் காணப்பட்டது.** | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் அதன் எல்லை மீறா வண்ணம் செலவழிக்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 11.2 | FR 94(1) இன்படி ஆண்டிறுதியில் எஞ்சிய ஏற்பாடுகள் பொறுப்புக்களை மீறவில்லை. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **12** | **அரசாங்க ஊழியர்களின் முற்பணக்கணக்கு** | | | |
| 12.1 | வரம்புகள் பின்பற்றப்பட்டன | இணக்கம் காணப்பட்டது. | | |
| 12.2 | நிலுவையில் காணப்படும் கடன்கள் மீது நேர பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் அதிகமான கடன் நிலவைகள் தீர்த்து வைக்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | **இணக்கம் காணப்பட்டது.** | | |
| 13.1 | F.R.571இன்படி காலாவதியான வைப்புத் தொகைகளை அகற்றுறவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படுகிறது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | **இணக்கம் காணப்பட்டது.** | | |
| 14.1 | பரிசீலனைக்க உட்பட்ட ஆண்டில் காசுப் பதிவேட்டின் மிஞ்சிய தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 14.2 | தற்காலிக முற்பணங்கள் பின்வருமாறு வழங்கப்பட்டன.<br>F.R. 371 இன்படி பணிமுடிந்த ஒரு மாத காலத்திற்குள் | இணக்கம் காணப்பட்டது. | | |
| 14.3 | F.R. 371 இல் அனுமதிக்கப்பட்ட வரம்பினை மீறி தற்காலிக முற்பணம் வழங்கப்படவில்லை. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 14.4 | கட்டு நிதியின் மிஞ்சிய தொகை மாதாந்தம் திறைசேரி ஏடுகளுடன் சரிபார்க்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **15** | **வருமானக் கணக்கு** | **இணக்கம் காணப்பட்டது.** | | |
| 15.1 | வருமானத்தின் மீள் செலுத்தல்கள் ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்கொள்ளப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 15.2 | வருமான சேகரிப்பானது வைப்புக் கணக்கிற்க வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமான கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 15.3 | FR 176 இன்படி வருமான நிலுவைத் தொகையானது கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதிக்கப்பட்ட ஆளணிக்குள் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டது. | இணக்கம் காணப்படவில்லை | அரசாங்க நிர்வாக அமைச்சிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. | பதவிகளுக்கான அலுவலர்களை நியமிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 16.2 | சகல ஊழியர்களுக்கும் எழுத்து மூல | இணக்கம் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடமைப் பட்டியல் வழங்கப்பட்டது. | காணப்பட்டது. | | |
| 16.3 | MSD இன் சுற்றறிக்கை 04/2017 மற்றும் 20.09.2017 இன்படி சகல அறிக்கைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **17** | **பொதுமக்கள் தகவல்களுக்கான ஏற்பாடுகள்** | | | |
| 17.1 | தகவலுக்கான உரிமை சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக தகவல் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டு முறையான பதிவேடு ஒன்று பராமரிக்கப்ட்டு இற்றைப்படுத்தப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்கள் இணையத்தளம் அல்லது மாற்று வழிகள் மூலமாக பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த இணையத்தளம் அல்லது மாற்று வழிகள் மூலம் அரச நிறுவனங்களை பாராட்டவோ குற்றம்சாட்டவோ வசதி செய்யப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 08 மற்றும் 10 இன்படி இரு வருடாந்த மற்றும் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. | இணக்கம் காணப்பட்டது. | | அறிக்கைகள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். |
| **18** | **மக்கள் சாசனத்தை நடைமுறைப்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018(1) இன்படி பிரசைகள் சாசனம் பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் என்பன உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 18.2 | சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்திகளுக்கமைவாக பிரசைகள் சாசனம் பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் என்பன தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்து மதிப்பிட நிறுவனத்தினால் முறைமை ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **19** | **மனிதவள திட்டத்தை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 02 2018 இல் உள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுடள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 19.2 | ஓவ்வொரு பணியாளருக்கும் வருடத்திற்கு 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத குறைந்தபட்ச பயிற்சி வாய்ப்பு வழங்குதல் மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேற்குறித்த சுற்றிக்கையின் இணைப்பு 01 இல் காணப்படும் படிவத்தின் அடிப்படையில் வருடாந்த செயலாற்று உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. | இணக்கம் காணப்பட்டது. | | |
| 19.4 | மேற்குறித்த சுற்றிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்து திறன் விருத்திக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல் நடத்ததல் போன்ற பொறுப்புக்கள் சிரேஷ்ட அலுவலர் ஒருவருக்க வழங்கப்பட்டுள்ளது. | இணக்கம் காணப்பட்டது. | | |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பதிலளிப்புகள்** | | | |
| 20.1 | கணக்காய்வாளர் அதிபதியினால் முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வுப் பகுதிகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் திருத்தப்பட்டன. | | | |

## அத்தியாயம் 08.- அமைச்சின் கீழான நிறுவனங்கள்

### 8.1 இலங்கை கணணி அவசர தயார்நிலை அணி (SLCERT)

இலங்கை CERT | CC ஆனது 2006 ஆண்டினல் இலங்கையின் ICT முகவர் நிலையத்தினால் தேசிய CERT ஆக நிறுவப்பட்டது. இலங்கையின் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பின் விரைவான வளர்ச்சியின் காரணமாக இணையப் பாதுகாப்பு சம்பவங்களின் சாத்தியமான அதிகரிப்பினை நிவர்த்தி செய்வதே இதனை நிறுவுவதற்கான முக்கிய காரணமாகும். இது வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது CERT|CC ஆனது தொழில்நுட்ப அமைச்சின் கீழ் செயலாற்றி வருகின்றது.

#### 8.1.1. நோக்கு

“ பொருத்தமான இணையப் பாதுகாப்பு மூலோபாயங்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட மற்றும் திருப்திகரமான வாடிக்கையாளர்கள்”

#### 8.1.2 செயற்பணி

அ. இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தகவல் பாதுகாப்பிற்கான தனியான, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் மிகவும் நம்பகமான தொடர்புப் புள்ளியாக செயற்படுதல்.

ஆ. பொது மற்றும் தனியார் நிறுவனங்கள். தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு ஆகியவற்றில் தகவல் பாதுகாப்பு பலவீனங்களை அடையாளம் கண்டு பாதுகாத்தல்.

இ. இணைய அச்சுறுத்தல்கள் மற்றும் பாதுகாப்பு பாதிப்புகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பபட்ட தகவல்களை வழங்குவதன் மூலம் தகவல் தொழில்நுட்ப பயனர்களைப் பாதுகாத்தல். இணைய அச்சுறுத்தல்கள் பற்றிய அறிவு, அனுபவம் மற்றும் தகல்களைப் பரிமாறிக் கொள்ள சர்வதேச சான்றிதழ் நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல். இலங்கை ஆனது தற்போது சைபர் பாதுகாப்பில் 28 சிறப்பு அலுவலர்களைக் கொண்டுள்ளது. அத்துடன், 5 பிரிவுகளாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அவை: வலையமைப்பிற்கான பாதுகாப்பு மற்றும்முன்கணிப்பு, பயன்பாட்டுப் பாதுகாப்பு, ஆராய்ச்சி, கொள்கை மற்றும் திட்டங்கள், பாதுகாப்புத் திட்டங்களும் பதிலளிப்பும், மனிதவளங்கள், நிர்வாகம் மற்றும் கணக்கியல் என்பவனவாகும்.

#### 8.1.3 கடமைகளும் செயற்பாடுகளும்

அ. பொறுப்பான சேவைகள்

இவை தகவல் அமைப்புக்களின் கூறுகள் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் திறன் கொண்டநிகழ்வுகளால் துாண்டப்பட்ட சேவைகளாகும். செயற்திறன்,ஒருமைப்பாடு அல்லது ஸ்திரதன்மையினை பாதிக்கும் வழக்கத்திற்கு மாறானதொரு நிகழ்வு ஒன்றுற கண்டறியப்பட்டதாக வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து வரும் கோரிக்கை அல்லது அறிவிப்பிற்கு பதிலளிப்பதனை இச்சேவை உள்ளடக்குகிறது.

ஆ. தகவல் பாதுகாப்புக் கொள்கை அபிவிருத்தி மற்றும் கருத்திட்ட அமுலாக்கம்

இப்பிரிவின் கீழ் தகவல் பாதுகாப்பு, கொள்கை அபிவிருத்தி மற்றும் கருத்திட்ட அமுலாக்கம் என்பனவும் அரசாங்க நிறுவனங்களுக்கான பாதுகாப்புக் கொள்கையினைத் தயாரித்தல், குறைந்தபட்ச தகவல் பாதுகாப்பு தரங்களை அறிமுகப்படுத்தல், அரச நிறுவனங்களின் தகவல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்குத் தேவையான கருத்திட்டங்களை அமுலாக்குதல், அரச அலுவலர்களின் இணையப் பாதுகாப்பு ஆற்றலை மேம்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், தேசிய மட்டத்திலான தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இ. விழிப்புணர்வு மற்றும் ஆலோசனைச் சேவைகள்

தொழில்நுட்ப அபிவிருத்திகளை இற்றைப்படுத்தல், சைபர் பாதுகாப்பு எச்சரிக்கைகளை வழங்கல், தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்தல், அரச மற்றும் தனியார் துறை தகவல் பாதுகாப்பு முறைமைகளில் சைபர் பாதுகாப்பினை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் இலங்கை ஊநுசுவ ’ ஊஊ இன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலமும் சமூக ஊடகங்களிலும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் என்பன இச்சேவையில் அடங்கும். ஆலோசனைச் சேவைகளானது வாடிக்கையாளர்களுக்கு அவர்களது தகவல் பாதுகாப்பு அமைப்பானது போதுமானதாக உள்ளதென்பதனைத் தீர்மானிக்கும் ஊடகமாக இருப்பதோடு( தேவைப்படின்) அதன் பாதுகாப்பினை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஈ டிஜிட்டல்மய தடயவியல் சேவைகள்

2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்னவு சாதனங்கள் மோசடிகள் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க டிஜிட்டல் தடயவியல் விசாரணைகளை நடத்துவதற்கு இலங்கை பொலிஸ் துறைக்கு இப்பிரிவு உதவும்.

### 8.1.4. கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றங்கள்

| கருத்திட்டங்கள் | அடைந்த முன்னேற்றம் |
|---|---|
| தேசிய சைபர் பாதுகாப்பு செயற்பாட்டு நிலையம் (NCSOC)<br><br>மொ.ம.தொ – 830.25 மில்<br>காலம் : Nov 2016- Dec 2023<br>நிதியியல் முன்னேற்றம் – சுள.77.17 மில்.<br>பௌதிக முன்னேற்றம் – 42% | 1. வன்பொருள் பெறுகை அளிக்கப்பட்டது.<br>2. திட்ட கால நீடிப்பு வழங்கப்பட்டது.<br>3. கண்காணிப்பு நிலைய பௌதிக அமைவிடத்திற்கான பெறுகை முடிவுற்றது.<br>4. உற்பத்தி தரவு நிலையத்திற்கான வன்பொருள் கொள்வனவு மற்றும் உற்பத்தித் தரவு நிலைய இணை அமைவிடம் என்பவற்றிற்கான பெறுகை நடவடிக்கை அமைச்சு மாற்றம் காரணமாக (2020) நிறுத்தப்பட்டது.<br>5. NCSOC இற்கான பெறுகை நடவடிக்கை மீள் ஆரம்பிக்கப்பட்டது. ஏல மதிப்பீடு நிறைவு பெற்றது.<br>6. பெறுகையில் குறிப்பிடப்பட்ட பிரிவு 7 நிதிஇன்மை காரணமாக இரத்துச் செய்யப்பட்டது.<br>7. கண்காணிப்பு நிலையத்தின் காட்சி அலகுகள், தளபாடங்கள், மடிக்கணனிகளுக்கான பெறுகை மேற்கொள்ளப்பட்டது.<br>குறைந்தபட்ச வன்பொருட்கள் மென்பொருட்களுடன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அச்சுறுத்தல் புலனாய்வுத் தளம் நிறுவப்பட்டது.<br>8. ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு, மீதமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிதி குறித்து அமைச்சின் உறுதிப்படுததலுக்கு காத்திருக்கின்றன.. |
| தேசிய உறுதிப்படுத்தல் அதிகாரசபை (NCA)<br><br>மொ.ம.தொ –ருபா.. 298.83 மில்.<br>காலம் 2016 – 2023<br>நிதியியல் முன்னேற்றம் – ருபா.198.99<br>பௌதிக முன்னேற்றம் – 70% | 1. வன்பொருள், மென்பொருள் பெறுகைகள் நிறைவு செய்யப்பட்டு செயற்பாட்டிற்கு வந்துள்ளன.<br>2. உற்பத்தித் தளம் மற்றும் காப்புத் தள பெறுகை நிறைவடைந்தது.<br>3. செயற்பாட்டிற்குத் தேவையான கொள்கை ஆவணங்களின் மேம்பாடு நிறைவடைந்தது.<br>4. கணக்காய்வாளருக்கான பெறுகை நிறைவடைந்தது.<br>5. இலங்கை CERT ஆனது, NCA. ஆக வர்த்தமானிப்படுத்தப்பட்டது.<br>6. கணக்காய்வு நேரத்திற்கான காலம் நிறைவு செய்யப்பட்டது.<br>7. திட்ட ஆரம்ப விழா (முக்கிய தலைமுறை விழா) நடத்தப்பட்டது.<br>8. ஊேயு இணையத்தளம் நிறைவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.<br>9. நேர கணக்காய்வு காலம் நிறைவுசெய்யப்பட்டு இறுதி கணக்காய்வாளர் அறிக்கைகாக காத்திருத்தல்<br>10. மூலச் சான்றிதழை மொசில்லா மற்றும் மைக்ரோசொப்ட் ருட் சான்றிதழில் உட்பொதிக்கும் பணி மேற்கொள்ளப்படுகின்றது.<br>11.முதல் Sub CA சோதனை CSR கைச்சாத்திடப்பட்டது. |
| 10 அரசாங்க நிறுவனங்களின் சைபர் பாதுகாப்பு தயார்நிலையை மேம்படுத்தல்.<br><br>மொ.ம.தொ – ருபா..130 மில்.<br>காலம் 2020 – 2024<br>நிதியியல் முன்னேற்றம் – 0<br>பௌதிக முன்னேற்றம்– 17% | 1. ஆரம்ப பெறுகை நடவடிக்கை நிறைவடைந்தது. புதிய பெறுகைகளை மேற்கொள்வதில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாக டென்டர்களை வழங்க முடியவில்லை.<br><br>2. பெறுகை நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டது. பெறுகை ஆவணம் தயார் செய்யப்பட்டு குழுக்களால் கையொப்பமிடப்பட்டது. |

| | |
|---|---|
| | 3. EOI மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டு RFP வழங்கப்பட்டது.<br>4. அபாய மதிப்பீட்டை மேற்கொள்ள KPMGஇற்கு அளிப்புச் செய்யப்பட்டது. |
| சைபர் பாதுகாப்பு தொடர்பான தேசிய ஆய்வு<br>மொ.ம.தொ – ருபா.. 34.1 மில்.<br>காலம் 2019-2023<br>நிதியியல் முன்னேற்றம் – ருபா.24.9மில்.<br>பௌதிக முன்னேற்றம் –78% | 1. ஆய்வுகள் ( இலங்கையின் தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு நிபுணர்களின் தேவை மற்றும் வழங்கலை மதிப்பீடு செய்தல், அபாயகர தகவல்கள் உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் தயார்நிலையை மதிப்பீடு செய்தல், தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு தொடர்பாக அரச ஊழியர்களை அறிவுறுத்தல். நிறைவஙைந்துள்ளது.<br>2. பிரதான ஆய்விற்கான ஆய்வு DCS இனால் நிறைவு செய்யப்பட்டது.<br>3. 2023 ஆம் ஆண்டின் தேசிய ஆய்வினை மேற்கொள்ள முடியாதுள்ளதாக DCS உத்தியோகபூர்வமாக அறிவித்தது.<br>4. நேரத்தை அதிகரிக்குமாறு னுடீஇற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. |
| சைபர் பாதுகாப்பு திறன்விருத்தியும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியும்<br>மொ.ம.தொ – ருபா. 36.10 மில்.<br>காலம் 2019 – 2023<br>நிதியியல் முன்னேற்றம் – ருபா.43.1 மில்.<br>பௌதிக முன்னேற்றம் – 90% | பெறுகை ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டன. |
| சைபர் பாதுகாப்பு குறித்த பங்குதாரர்களின் விழிப்புணர்வை அதிகரிக்க இணையத்தளத்தை வடிவமைத்தல் மற்றும் உருவாக்கல்<br>மொ.ம.தொ – ருபா. 08.05 மில்.<br>காலம் : 2020-2024<br>நிதியியல் முன்னேற்றம் –ருபா.2.8 மில்.<br>பௌதிக முன்னேற்றம் – 90% | ஆதரவும் பராமரிப்பும் மேற்கொள்ளப்படுகின்றன. |
| தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பிற்கான தேசிய நிபுணத்துவ தரங்களை அஅபிவருத்தி செய்தல்.<br>மொ.ம.தொ – ருபா. 9.50 மில்.<br>காலம் : 2020-2023<br>நிதியியல் முன்னேற்றம்–ருபா.1.7 மில்.<br>பௌதிக முன்னேற்றம் – 60% | 1. ஊநுசுவு மற்றும் வுஏநுஊ இடையிலாள புரிந்துணர்வ ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.<br>2. NVQ மட்டம் 5 வெளியிடப்பட்டது.<br>3. NVQ மட்டம் 6 பாடநெறி மேம்படுத்தப்பட்டது.<br>4. NVQ மட்டம் 6 பாடநெறி மீளாய்வு மேற்கொள்ளப்படுகிறது.<br>5.கம்பஹா தொழில்நுட்ப கல்லூரி நிகழ்ச்சியை ஆரம்பித்துள்ளது.<br>6. VTA நிகழ்ச்சியை ஆரம்பிப்பதற்கான தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளது. |
| அரசாங்க அலுவலர்களுக்கான ந கற்றல் நிகழ்நிலை பாடதொகுதிகளின் அபிவிருத்தி<br>மொ.ம.தொ – Rs. 30 Mn<br>காலம் : 2020-2024<br>நிதியியல் முன்னேற்றம்–ருபா. மில்.<br>பௌதிக முன்னேற்றம – 70% | 1. பாடநெறியை மேம்படுத்தும் ஆலோசனைகளுக்கான ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டது.<br>2. பாடத்தொகுப்பு மேம்பாடு நிறைவடைந்தது. |

| | |
|---|---|
| சைபர் பாதுகாப்பு திறன் விருத்தித் திட்டம் 10,000 அரச ஊழியர்கள் பயிற்றப்படவுள்ளனர்.<br><br>மொ.ம.தொ – ருபா.. 59 மில்.<br>காலம் : 2020-2023<br>நிதியியல் முன்னேற்றம் –ருபா. 1.15மில்.<br>பௌதிக முன்னேற்றம் – 10% | 1940 அரச அலுவலர்களுக்கான சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிறைவு செய்யப்பட்டது. |

## 8.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA)

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுடப நிறுவனமானது (ஐஊவுயு) அரசாங்கத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மிக உயர்நத நிறுவனம் ஒன்றாகும். 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் , 2008 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்த சட்டத்தின்படி ஆனது தகவல் தொழில்நுட்பம் தெடர்பான அரசாங்கத்தின் கொள்கை மற்றும் செயற்திட்டத்தை செயற்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிறுவனமாகும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்தின் 6 ஆம் பிரிவின்படி ICTA ஆனது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு அமைச்சரவையின் அமைச்சர்களுக்கு தேவையான சகல தகவல்களையும் வழங்குதல் வேண்டும். ஐஊவுயு என்பது 2004 முதல் 2011 வரையில் உலக வங்கியினால் நிதி உதவி வழங்கப்பட்ட e- SriLanka அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவதற்கு நிறுவப்பட்ட முற்றுமுழுதாக இலங்கை அரசிற்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றாகும். இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே e- SriLanka கருத்திட்டமாகும்.

காலப்போக்கில் ICTA இன் முன்னேற்றமானது நாட்டிலும் சமூகத்திலும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வளர்ச்சியினை காட்டியதன் காரணமாக அதன் நிரந்தர இருப்பிற்கான முக்கியத்துவத்தையும் தேவையையும் அரசாங்கம் அறிந்து கொண்டது. அங்கீகரிக்கச் செய்தது. இதன் விளைவாக 2003 ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கடைசிப் பகுதி 2008 ஆம் அண்டு திருத்தப்பட்டது.

தற்போது ICTA ஆனது தேசிய அளவிலான வழிகாட்டுதல்களையும் ஒருங்கிணைப்பினையும் வழங்கும் உயர் மட்ட நிறுவனம் ஒன்றாக உள்ளது. செயற்திறனானதும் பிரசைகளை மையமாகக் கொண்ட சேவைகளை வழங்கல், சந்தைவாய்ப்பு மற்றும் அரசாங்க பொறிமுறைகளை இலகுவாக்கல் அறிவுப் பரிமாற்ற கருவியாக தகவல் தொழில்நுட்பம் ஊடாக டிஜிட்டல் ஆளுகையை விரிவாக்கல் சர்வதேச e-வர்த்தகம் மற்றும் இலத்திரனியல் கட்டண திட்டங்கள் என்பவற்றை உருவாக்கல், தரவுப் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு புலமைச் சொத்துக்கள் தொடர்பான புதிய சட்டங்கள் மற்றும் நிறுவன கட்டமைப்புகளை வடிவமைத்தல் என்பன இதில் அடங்கும்.

இத்தகைய பலமான ஆளுகையுடனான நாம் அரசதுறை, தனியார்துறை அரச சார்பற்ற நிறுவனங்கள் கல்வித்துறை போன்ற துறைகளில் பின்புல அனுபவம் கொண்ட தொழில்வாண்மையோரைக் கொண்ட ஒரு குழுவாக நாம் ஒருங்கிணைந்துள்ளோம். தகவல் தொழில்நுட்பத்தினை பலப்படுத்துவதன் மூலம் தேசத்தின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு முகாமையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் நிபுணர்கள் ஆகியோரோடு கலாசாரங்களுக் கிடைப்பட்ட தொழில்வாண்மையோர் மற்றும் மதிப்பீட்டு நிபுணர்கள் அகியோர் இடம் பெற்றள்ளனர்.

### 8.2.1 தொலை நோக்கு

"டிஜிட்டல் மயமாக அனைவரையும் உள்ளடக்கிய வளமான இலங்கை"

### 8.2.2 செயற்பணி

இலங்கைப் பிரசைகளின் வாழ்க்கையை பரிமாற்றுவதற்கு முடியுமான வகையில் புத்தாக்கம், ஒழுக்கம் மற்றும் தொழில்முறை என்பவற்றை நடைமுறைப்படுத்தி காட்சிப்படுத்துவதன் மூலம் செயற்திறன் மிக்க டிஜிட்டல் தீர்வுகளுடன் தேசத்திற்கு சேவை செய்தல்.

### 8.2.3. நோக்கங்கள்

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் (ICTA) நோக்கங்கள் 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் மூலம் பின்வரும் பிரதான தொழிற்பாடுகளுக்கு (ICTA) பொறுப்பாக உள்ளது.

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தல்.

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதற்கும் அதனை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து தகவல்களையும் அமைச்சரவைக்கு வழங்கி உதவுதல்.
- இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வதற்கும் மேம்படுத்துவதற்குமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.
- அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை ஊக்குவித்தலும் அதற்கு வசதியளித்தலும்.
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஊக்குவித்தலும், உதவுதலும்
- அரச மற்றும் தனியார் துறைகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சி மற்றும் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களை தாபித்தலும் பராமரித்தலும்
- இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனையை ஊக்குவித்தலும், வசதியளித்தலும்
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை மேம்படுத்த உள்நாட்டு, சர்வதேச தொடர்புடைய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைதல்.
- இலங்கைக்குள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு முறைமைகளின் பாதுகாப்பை உறுதி செய்தல்.
- துகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் நாட்டின் அபிவிருத்தியில் அதன் தாக்கம் தொடர்பில் அரசாங்கத்மதிற்கு ஆலோசனை வழங்கல்.
- இந்த கட்டளைகள் இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையை முன்னேற்றுவதிலும் நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழில்நுட்பத்தை மேம்படுத்தவும் முக்கிய பங்கு வகிப்பதற்கான அதிகாரத்தை வழங்குகிறது.

### 8.2.4 கருத்திட்டங்களின் பௌதிக முன்னேற்றம்

| | திட்டங்கள் | 2023-09-30 இற்கு அடைந்த முன்னேற்றம் |
|---|---|---|
| 1 | அரச டிஜிட்டல் கட்டணத் தீர்வு | முன்னோடித் திட்டமானது தேந்தெடுக்கப்பட்ட 11 நிறுவனங்களில் (கம்பஹா நகர சபை, பிரதேச செயலகம் ரத்மலானை, கேகாலை திம்பிரிகஸ்யாய மற்றும் நில அளவைத் திணைக்களம், அணு சக்திச் சபை, ரம்புக்கனை பிரதேச சபை, (தொழிற்பயிற்சி அதிகாரசபை ) என்பவற்றில் 2023 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்படடது. செயற்பாட்டு வழிகாட்டலுக்கான வரைபு நிறைவடைந்துள்ளது. முன்னோடித் திட்டத்தின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு 2023 இன் 4 ஆம் காலாண்டில் ஆரம்பிக்கப்படும். அமைச்சானது லங்கா பே (Lanka Pay) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிறுவனங்களின் அலுவலர்களுக்கான பயிற்சி தொடர்கள் 2024.11.22 இல் SLIDA வில் ஆரம்பிக்கப்பட்டது.<br><br>MOT/ICTA மற்றும் Lanka Pay என்பவற்றிற்கிடையிலான முத்தரப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. |
| 2 | இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாளம் (SLUDI) கட்டமைப்பு<br><br>TEC –300 கோடி இந்திய ருபாய்<br>GOSL – ருபா.6இ810 மில்.<br>காலம் : நவம்பர் 2021 – டிசம்பர் 2024<br>நிதி முன்னேற்றம – ருபா. 92.06 மில்.<br>பௌதிக முன்னேற்றம் - 15% | அடையாளத் திட்ட ஒருங்கிணைப்பாளர் - 2023 மே 30 ஆம் திகதி விலை மனு கோரபட்டது. 2023 ஆகஸ்ட் 01 ஆம் திகதி விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டன.<br><br>2 விலைமனுக்கள் பெறப்பட்டு அவை இரண்டும் பதிலளிக்காமை காரணமாக அமைச்சின் செயலாளர், மீள் விலைமனு கோரலுக்கான அமைச்சரவையினை அறிவுறுத்தி அனுமதியைப் பெறுமாறு ஆலோசனை வழங்கினார். அதன்படி அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டது. |
| 3 | தேசிய இடஞ்சார் தரவுக் கட்டமைப்பு (NSDI)<br><br>TEC – ருபா. 530 மில்.<br>காலம் 2016 – 2022<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா.175.27 மில்.<br>பௌதிக முன்னேற்றம் - 82% | கட்டம் -1 மற்றும் கட்டம் 11 நிறைவுசெய்யப்பட்டன. –www.nsdi.gov.lk. NSDI 2022-2024 இற்கான வரைபடம் மற்றும் கொள்கை மேம்படுத்தப்பட்டது. |
| 4 | அரச டிஜிட்டல் படிவங்கள் (form.gov.lk)<br><br>TEC – ருபா. 84 மில்.<br>காலம் 2021-2024<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 84 மில். (ஊநுசுஊ இன் கீழ்)<br>பௌதிக முனனேற்றம் -35% | 31 படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டதாக ICTA இனால் தெரிவிக்கப்ட்டது. 11,274 பிரசைகள் டிஜிட்டல் அரச படிவத் தளத்தில் பதிவு செய்துள்ளனர். இதுவரை 3,138 சமர்ப்பிப்புகள் பிரசைகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டணங்களுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>திட்டமிடப்பட்ட 40 நிறுவனங்களில் 23 நிறுவனங்கள் இணைப்புச் செய்யப்பட்டன. |
| 5 | ஊழியர் நம்பிக்கை நிதியம்<br>TEC -ருபா.100 மில்.<br>காலம்- 2016-2023<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா.77.04 மில்.<br>பௌதிக முன்னேற்றம்- 96% | User Acceptance Test (UAT) நிறைவு செய்யப்பட்டது. Operational Aceeptance Test (OAT) இன்போது ஊழியர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. தத்தெடுப்பு /பாவனை என்பன சவால்களாகும். |
| 6 | இலங்கை அரச வலையமைப்பு 2.0<br>TEC –ருபா.12.737 மில்.<br>காலம் - 2016-2023<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 5906.90 மில்.<br>பௌதிக முன்னேற்றம் - 100% (உதவியும் பராமரிப்பும்) | 2023.12.22 இலிருந்து 2024.4.19 இற்கான உதவி மற்றும் நிர்மாண பராமரிப்பிற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 7 | இலங்கை அரச கிளவுட் 2.0<br>TEC – ருபா.2,449.50 மில்.<br>காலம் - 2016-2023<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா.551.66 மில்.<br>பௌதிக முன்னேற்றம் - 100% | Bare metal ஒப்பந்தம் மற்றும் Memory upgrade and ticketing system பெறுகைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் நிதி உறுதிப்பாட்டிற்கான திறைசேரியின் அனுமதியினைப் பெறல் வேண்டும்.<br>இணை இருப்பிட சேவைகள் (co-localtion services) - 50 % Red Hat Open Stack அனுமதிப்பத்திர புதுப்பிப்பு - 30% நிறைவு பெற்றது.. |
| 8 | அரசாங்க தகவல் நிலையம் (GIC)<br>பௌதீக முன்னேற்றம் - 100% ( உதவியும் பராமரிப்பும்) | செயற்பாடும் பராமரிப்பும் தொடர்கிறது. |
| 9 | தொழில்நுட்பத் துறை நிகழ்ச்சி திட்டம்<br><br>TEC : ருபா. 759 மில்.<br>காலம்: செப்டம்பர் 2021 – டிசம்பர் 2024<br>நிதியியல் முன்னேற்றம் : ருபா. 237 மில்.<br>பௌதீக முன்னேற்றம்:: 30% | ஏற்றுமதி தயார்நிலையை அதிகரித்தல். ( போதுமான அறிவு மற்றும் திறன்கள்) 15 நிறுவனங்கள் ஒருவருக்கொருவர் அடிப்படையில் வர்த்தக பயிற்சியில் பங்கேற்று குழ திறன் அபிவிருத்தியில் கலந்து கொண்டனர்.<br><br>பிராந்திய வுநுஊ மாநாடு – பல்வேறு பயிற்சிகள் மூலம் ஏற்றுமதிச் சந்தை தயார்நிலையை அதிகரிப்பதற்கான 25 IT-SMEs உடன் வடக்கு அத்தியாயமும், 30+ IT-SMEs உடன் தெற்கு அத்தியாயமும் நடைபெற்றன.<br><br>மீள் திறன் Æ திறமையான ஐவு டீஆ பணியாளர்கள்- பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான பிராந்திய மாநநட்டு அமர்வு ஒன்று நடத்தப்பட்டது. ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சிக்காக 10 கம்பனிகளால் 150 நபர்கள் நேர்காணல் செய்யப்பட்டனர். |
| 10 | தொழில்நுட்ப பரவலாக்கல் திட்டம்<br><br>TEC – ருபா. ,இ002 மில்<br>காலம்: 2021 – 2024<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 31.58 மில்.<br>பௌதீக முன்னேற்றம் : - 23மு | பில் மற்றும் மெலின்டா கேட்ஸ் நிதியம் (Bills and Melinda Gate Foundation - BMGF) மே 29 முதல் ஜுன் 2 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டது. தொல்பொருள் திணைக்கள அனுராதபுரம் செயற்திட்டத்தின் உள்ளீடுகளை வழங்குதல், AFD நிதிஉதவியுடன் பிரான்ஸ் துாதரகம், திணைக்கள் துறைசார் நிபுணர்களுடன் கூட்டங்கள் நடத்தப்பட்டன.<br>சுற்றுலா மற்றும் பயண தொழில்நுட்ப மன்றத்தின் கருத்துப்பத்திரம் பூர்த்தி செய்யப்பட்டது, |
| 11 | இலங்கையின் டிஜிட்டல் உள்ளடக்கத்திற்கான திறன் அபிவிருத்தி<br><br>TEC – Rs.1,005 Mn<br>காலம் 2021 – 2024<br>நிதியியல் முன்னேற்றம் – Rs.3.41Mn<br>பௌதீக முன்னேற்றம் – 35% | கூறு 1<br>டிஜிட்டல் அறிவின் வரையறையை செம்மைப்படுத்துவதற்கும் மதிப்பீட்டு பிரமாணங்களை உருவாக்குவதற்கும் ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது.<br>சுகுருலிய கட்டம் 11 இற்கான மூலோபாய வரைபிற்கான பங்குதாரர்களின் ஆலோசனை மன்றம் நடத்தப்பட்டது.<br><br>அரசாங்க ஊழியர்களுக்கான சுயாதீன முன்னெடுப்பு கொழும்பு மாவட்டத்தில் நடத்தப்பட்டது.<br>இரண்டாவது புத்தாக்க முகாமிற்கான பதிவும் தேர்வும் நிறைவு செய்யப்பட்டது.<br><br>கூறு 2<br>1500 மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் வழங்கப்பட்டது.<br>தொழில் வழிகாட்டலுக்கான தேசிய திட்டம் நிவைுசெய்யப்பட்டது.<br>பணியாளர் ஆய்விற்கான பெறுகை ஆரம்பிக்கப்பட்டு ToR. நிறைவுசெய்யப்பட்டது.<br><br>கூறு 3<br>ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டிற்கான அணுகுமுறைகள் குறித்த விழிப்புணர்வு 3 முக்கிய தகவல் உட்கட்டமைப்பு நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது.<br>ஓய்வூதியத் திணைக்களத்தின் தற்போதைய தகுதி மதிப்பீடு<br>அடையாளம் காணப்பட்ட 60 திறன் வாய்ந்த CDIOs. களுக்கான தேசிய திறன் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.<br><br>AI இற்கான 25 ஆவது டிஜிட்டல் அரசாங்க செயற்பாட்டு மன்றம். |
| 12 | அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களம் (GAD) இற்கான ICT தீர்வுகள்<br><br>TEC – ருபா. 40 மில். | பணிப்பாளர் சபையின் அனுமதி Informatics (Pvt)Ltd உடனான ஒப்பந்தத்தை மீளசெயற்படுத்துவதற்கு வழங்கப்பட்டது மற்றும் ஒப்பந்தச் சேர்க்கை (Contract addendum) தயாரிக்கப்பட்டு வருகின்றது.<br><br>GAD மற்றும் ICTA இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம்<br>கைச்சாத்திடுவதற்கான ICTA வின் legal clearance கிடைக்கப்பெற்றது. |

| | | |
|---|---|---|
| | காலம் 2016- 2022<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 26.52 மில்.<br>பௌதீக முன்னேற்றம் - 85% | KOICA, GAD மற்றும் Informatics (Pvt)Ltd இடையேயான கூட்டம் தற்போதுள்ள முறைமையை முழு ICTA க்கு விபரிக்க நடைபெற்றது. |
| 13 | ஊழியர் நம்பிக்கை நிதியம்<br>TEC –ருபா. 100 மில்.<br>காலம் - 2016-2023<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா.77.04 மில்.<br>பௌதீக முன்னேற்றம் - 98% | 20 பாவனை பயிற்சித் தொடர்கள் நிறைவடைந்தன. பாவனை பயிற்சித் தொடர்கள் முடிவடைந்ததும் OAT ஆரம்பிக்கப்படும். |
| 14 | e-பாராளுமன்றம்<br>TEC –ருபா. 185 மில்.<br>காலம் - 2017-2022<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 31.58 மில்.<br>பௌதீக முன்னேற்றம் - 70% | ஆரம்ப கணனித் தேவையின் அடிப்படையில் ஆவண முகாமைத்துவத்திற்கான அமைப்பு உருவாக்கப்பட்டது. அமைப்பை மேலும் வலுப்படுத்து முகமாக ICTA ஏற்கனவே அமைப்புத் தேவைப்பாட்டு ஆய்வை நிறைவு செய்துள்ளது. UAT மற்றும; OAT மீளமைப்பு 2 நடைபெற்று வருகிறது. |
| 15 | ஆரம்ப மற்றும் பிரமாண நிகழ்ச்சித் திட்டம்<br>TEC – ருபா. 625 மில்.<br>காலம் - 2021-2024<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 9.03 மில்.<br>பௌதீக முன்னேற்றம் - 75% | இம்முயற்சியானது ஆரம்பத்திலிருந்தே 29 வர்த்தக சந்தைகளுக்கான அணுகல்களை வெற்றிகரமாக எளிதாக்கியது.<br>மொத்தமாக 29 ஆரம்ப நிறுவனங்களுக்கு இன்குபேட்டர் (Incubator) மற்றும் முடுக்கிகளுக்கு மதிப்புமிக்க அணுகல்கள் வழங்கப்பட்டன. முன்னைய ஸ்பைரலே'ன் கோரின் 10 ஆரம்ப நிறுவனங்களில் 8 இற்கு நிதி வழங்கப்பட்டதுடன் 2 ஆரம்ப நிறுவனங்கள் குறிப்பிட்ட மைல்கல்லை திருப்திகரமாக எய்தும் வரை அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. |
| 16 | பிராந்திய கொத்தணி அபிவிருத்தி<br>TEC – ருபா. 163 மில்.<br>காலம் - 2021-2024<br>நிதியியல் முன்னேற்றம் - ருபா. 1 மில்.<br>பௌதீக முன்னேற்றம்- 46% | பிராந்திய கூற்றுச்சூழல் மதிப்பீடு: மாவட்ட டிஜிட்டல்மய தயார்நிலை குறியீட்டின் பகுப்பாய்வு நிறைவு செய்யப்பட்டு குடிசன தொகைமதிப்பு திணைக்களத்துடன் மீளர்யவ செய்யப்பட்டது.<br>டிஜிட்டல் பரிமாற்றத்திற்கான முடுக்கி<br>குற்றல் மற்றும் புத்தாக்க நிலையம்<br>கொழும்பு மாவட்டத்தில் சுயாதீன செயற்பாடுகள் ஆரம்பிக்கப்ட்டன. |

## 8.3 இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRCSL)

இலங்கை தொலைத்தொட்ாபு ஒழுங்காக்கல் ஆணைக்குழுவானது (TRCSL) இலங்கை தொலைத்தொடர்பு (திருத்தப்படட) சட்டம் 1996 இன் 27 ஆம் இலக்கத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இலங்கையின் தொலைத்தொடர்புகளுக்கான ஒழுங்காக்கல் முகவர் என்ற வகையில் ஒழுங்காக்கல் செய்முறையினை வடிவமைதல், பொதுமக்களின் நலன்களைப் பாதுகாத்தல். மற்றும் அதிகரித்துவரும் போட்டித்தன்மை மிக்க சந்தையின் சவால்களுக்குப் பதிலளிக்கக்கூடியதாக இருத்தல் ஆகியவற்றின் மூலம் தொலைத்தொடர்புத் துறையில் நிலைபேறான அபிவிருத்தியை நாம் ஊக்குவிப்போம். TRCSL ஆனது சந்தையில் போட்டியானதும் திறந்ததும் செயற்திறன் கொண்டதாகவும் இருப்பதனை உறுதி செய்யும்.

TRCSL என்பது தொலைத்தொடர்பு பணிப்பாளர் நாயத்தின் அலுவலக வாரிசாகும்.

**கடமைகள் மற்றும் செயற்பாடுகள்**

ஆணைக்குழுவானது தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதில்லை. ஆனால், தனியார் துறையானது இச்சேவைகளை செயற்திறனாகவும் ஒழுங்காகவும் வழங்குவதை ஊக்குவிக்கின்றது. வுசுஊளுடு ஒரு முன்னணி அரச நிறுவனமாக இருப்பதனால் இலங்கையின் தொலைத்தொடாபுச் சேவைகளுக்கான தேசிய ஒழுங்காக்கல் செயல்முறையினை வடிவமைப்பதன் மூலமும் பொதுநலனைப் பாதுகாப்பதன் மூலமும் அதிகரித்து வரும் போட்டித்னதன்மையின் சவால்களுக்குப் பதிலளிக்கூடியதாகவும் இருப்பதன் மூலம் தொலைத் தொடர்புத் துறையின் நிலைபேறான அபிவிருத்தியை ஊக்குவிக்கிறது.

**சட்ட கட்டமைப்பு**

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்காக்கல் ஆணைக்குழு (TRCSL - The Commission) என்பது 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்பு சட்டத்தின் (சட்டம்) கீழ் 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தினால் நிறுவப்பட்ட ஒரு அரசாங்க நியதிச்சட்ட நிறுவனமாகும். TRCSL தொலைத்தொடர்பு பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தின் வாரிசு (Successor) ஆகும்.

### 8.3.1 நோக்கு

“ விஞ்ஞான மற்றும் ஒழுங்காக்கல் சிறப்பின் மூலம் முன்னேறும் தகவல்தொடர்புத் துறையில் உலகத் தலைவராக அங்கீகரிக்கப்படல்.”

### 8.3.2 செயற்பணி

திறமையான மற்றும் நெறிமுறை கொண்ட ஊழியர் படை மூலம் போட்டித்தன்மையான சந்தையில் நியாயத்தினையும் நீதியையும் மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான மற்றும் கட்டுபடியாகக்கூடிய செலவில் நாடுதழுவிய ரீதியில் சரியான நேரத்தில் சேவை வழங்குவதை உறுதி செய்தல்.

### 8.3.3 நோக்கங்கள்

- இலங்கையில் நம்பகமானதும் செயற்திறனானதுமான தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு சேவைகளை வழங்குவதை உறுதி செய்தல்.
- ஓவ்வொரு செயற்பாட்டாளரும் தேவையான தொழில்நுட்பத்தை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தலும் அதனைப் பயன்படுத்தலும். அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளின் ஒழுங்குவிதிகளை நிதியியல் மற்றும் முகாமைத்துவ வளங்களை உறுதிப்படுத்தல்.
- தொலைத்தொடர்பு சேவைகளின் தரம் மற்றும் பல்வேறுபட்ட தொலைத்தொடர்பு சேவைகளுக்கான கட்டணங்கள் தொடர்பில் நுகர்வோர், பிற பாவனையாளர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்.

- தொலைத்தொடர்புத் துறையின் பயனுள்ள போட்டியைப் பராமரித்தலும் ஊக்குவித்தலும்.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு வசதிகளின் விரைவானதும் நிலைபேறானதுமான வளர்ச்சியை ஊக்குவித்தல்.

- தேவையற்ற தாமதம், இடையூறு அல்லது தடங்கல் இன்றி நம்பகமானதும் செயற்திறனானதுமான சேவையினை வழங்குவதற்கான தமது கடமைகளை செயற்பாட்டானர்கள் நிறைவேற்றக்கூடியோராக இருப்பதை உறுதி செய்தல்.

- தொலைத்தொடர்பு மற்றும் அது தொடர்பான துறைகளில் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி மற்றும் பயன்பாடு குறித்த ஆலாய்ச்சிகளை ஊக்குவித்தல்.

- இலங்கைக்கு வெளியே தமது வர்த்தகத்தை மேற்கொள்ளும் தொலைத்தொடர்பு சேவைகளின் பிரதான பயனீட்டாளர்களை இலங்கைக்குள் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல். இலங்கையின் சர்வதேச போக்குவரத்து சேவைகளின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.

## 8.3.4 திட்டத்தின் பௌதிக முன்னேற்றம்

| கருத்திட்டம் | ஓட்டுமொத்த பௌதிக முன்னேற்றம் (30.09.2323 இற்கு) |
|---|---|
| கமட்ட சன்னிவேதனய தேசிய திட்டமானது நாடுதழுவிய 4ஜp/ ∴பைபர் புரோட்பேண்ட் தேவையை நிறைவேற்றுகிறது.<br><br>• 2020 - 5%<br>• 2021 - 10%<br>• 2022 - 26%<br>• 2023 - 46%<br>• 2024 - 64%<br>• 2025 - 82%<br>• 2026 - 100%<br><br>மொ.ம.தொ- 15 பில்.<br>( 2021 தேசிய பாதீட்டு முன்மொழிவில் குறிப்பிடப்பட்டது.)<br>காலம் : 2020 நவம்பர் - 2026 டிசம்பர் | • இரத்தினபுரி (35 தளங்கள்) – 31 தளங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன, 2 நிர்மாண கட்டத்தில், 2 காணி அடையாளப்படுத்தும் கட்டத்தில்<br>• குருநாகலை (35 தளங்கள்) – 17 தளங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன , 09 தளங்கள் நிர்மாண கட்டத்தில், 09 தளங்கள் அனுமதி வழங்கும் கட்டத்தில்<br>• மாத்தறை (21 தளங்கள்) – 7 தளங்கள நிர்மாணிப்பு கட்டத்தில், 10 தளங்கள் அனுமதி வழங்கும் கட்டத்தில், 4 தளங்கள் காணி அனுமதி நிலையில்<br>• கண்டி (33 தளங்கள்) – 3 தளங்கள் நிர்மாண கட்டத்தில், 10 தளங்கள் அனுமதி வழங்கும் கட்டத்தில், 20 தளங்கள் காணி அனுமதிக் கட்டததில்<br>• அனுராதபுரம் (31 தளங்கள்) – 03 தளங்கள் நிர்மாண கட்டத்தில், 18 தளங்கள் அனுமதி வழங்கும் கட்டத்தில், 10 காணி அனுமதிக் கட்டததில்<br>• பதுளை (34 தளங்கள்) – 01 தளம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது, 09 தளங்கள் அனுமதி வழங்கும் கட்டத்தில், 24 தளங்கள் காணி அனுமதி கட்டத்தில்<br>• களுத்தறை (34 தளங்கள்) – 7 தளங்கள் நிர்மாண கட்டத்தில், 19 தளங்கள் அனுமதி பெறும் கட்டத்தில், 8 தளங்கள் காணி அனுமதி கட்த்தில்<br>• கேகாலை (34 தளங்கள்) – 10 தளங்கள் நிர்மாண கட்டத்தில், 08 அனுமதி பெறும் கட்டத்தில், 16 காணி அனுமதி கட்டத்தில்<br>• யாழ்ப்பாணம் (11 தளங்கள்) – 03 தளங்கள் அனுமதி பெறும் கட்டத்தில், 08 தளங்கள் காணி அனுமதி கட்டத்தில்<br>• திருகோணமலை (08 தளங்கள்) – 08 தளங்கள் காணி அடையாளப்படுத்தும் கட்டத்தில் |
| School Fiberization Project<br>1000 தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இணையத்தள (internet) வசதிகளை கல்வி அமைச்சுடன் கலந்தாலோசித்து வழங்குதல<br>மொ.ம.தொ ˙1200 மில்<br>காலம் : 2022-2023 | -<br>• 520 பாடசாலைகளுக்கு ∴பைபர் இணைப்புக்களை வழங்குமாறு செயற்பாட்டாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.<br>• செயற்பாட்டாளர்கள் இணைப்பை வழங்க ஆரம்பித்துள்ளனர். |
| அடுத்த 5 வருடங்களுக்கான அலைக்கற்றை வரைபட தயாரிப்பு<br><br>மொ.ம.தொ - இல்லை<br>காலம்: நவம்பர் 2020 - 2021 | 01 ஆம் காலாண்டில் வரைபு அறிக்கை தயாரிக்கப்ட்டு பூர்த்தி செய்யப்பட்டது. |
| அடுத்த 5 வருடங்களுக்கான அலைக்கற்றை வரைபட நிறைவு செய்தல்<br><br>மொ.ம.தொ - இல்லை<br>காலம் - நவம்பர் 2023 - 2023 | -<br>லங்கா பெல் தவிர்ந்த அனைத்து செயற்பாட்டாளர்களும் ஆலோசனைப் பத்திரத்திற்கு பதிலளித்துள்ளனர். இதற்கான குழு நியமிக்கப்பட்டு அதன் முடிவுகள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. |
| 5 ஜி இற்கான ஸ்பெக்ரம் பணி<br><br>மொ.ம.தொ இல்லை<br>காலம் : நவம்பர் 2023- 2023 | -<br>குறுகிய செயலமர்வுகள் மற்றும் நேருக்க நேரான கூட்டங்கள் நிறைவடைந்தன. 2023 இல் ஆலோசனை அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இது ஞ1 2024 இல் நிறைவு செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| உள்ளூர் ICT தன்னார்வலர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம்<br><br>மொ.ம.தொ 1.5 மில்.<br>காலம்: நவம்பர் 2023 – 2023<br>நிதியியல் முன்னேற்றம் - 84.8% | -<br>• திட்டத்தின் மறு ஆரம்ப முகாம் 2023 ஏப்ரல் 27 ஆம் திகதி நிறைவுசெய்யப்பட்டது. பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த வளவாளர்கள், தொலைத்தொடர்பு செயற்பாட்டாளர்கள், SLCERT ஆகியோரால் அமர்வுகள் நடத்தப்பட்டன.<br>• கல்வி அமைச்சுடன் இணைந்து பதுளை, கண்டி, இரத்தினபுரி, அம்பாறை, காலி, மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு 2023 மே 08 ஆம் திகதியிலிருந்து தன்னார்வ தொண்டர்களை நியமிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.<br>• மீள் ஆரம்ப முகாமின் வளவாளர்கள் தன்னார்வலர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.<br>• ICT இன் தன்னார்வ தொண்டர்கள் ஜுன் மாதத்தில் தமது முதல் மாத சேவையினைப் பூர்த்தி செய்தனர்.<br>• தன்னார்வத் தொண்டர்களுக்கு அவர்களுக்க ஒதுக்கப்பட்ட பாடசாலைகளின் தொண்டிற்கான கொடுப்பனவு வழங்கப்பட்டது.<br>ICT தன்னார்வலத் தொண்டர்கள் தமது இரண்டாம் மாத தொண்டினை ஜுலை மாதம் நிறைவு செய்தனர்.<br>• தன்னார்வத் தொண்டர்களுக்கு அவர்களுக்க ஒதுக்கப்பட்ட பாடசாலைகளின் தொண்டிற்கான 2 ஆம் மாத கொடுப்பனவு வழங்கப்பட்டது. |
| எண் பெயர்வினை அமுலாக்கல்<br>மொ.ம.தொ - 2மில்.<br>காலம்: நவம்பர் 2023 -2023<br>நிதியியல் முன்னேற்றம் -69% | சட்டங்களுக்கான சட்டமா அதிபரின் அனுமதி நிலுவையில் உள்ளது.<br>NP செயற்பாட்டாளரின் தொழில்நுட்ப தீர்விற்கு பெறப்பட்ட விலைமனுக்களின் தொழில்நுட்ப மதிப்பீட்டினை உத்தரவாத நிறுவனம் நிறைவு செய்துள்ளது.<br>NP செயற்பாட்டாளருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் பணி இறுதிக் கட்டத்தில் உள்ளது, |

## 8.4 இலங்கை தரநிர்ணய நிறுவனம் (SLSI)

இலங்கை தர நிர்ணய பணியகம் (SLSI) 1964 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இலங்கை தரநிலைகள் சட்டத்தின் கீழ் இலங்கை தரநிலைகள் பணியகமாக நிறுவப்பட்டது. இந்த சட்டம் 1984 ஆம்ஆண்டு இல. 6 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை தரநிலைகள் கட்டளைகள் நிறுவனம் என திருத்தம் செயய்யப்பட்டது. இது இலங்கையில் தரப்படுத்தல் மற்றும் தர முகாமைத்துவ நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கான முதன்மைப் பொறுப்புடன் கூடிய அதிகாரம் பெற்ற நிறுவனமாகும்.

ளுடுளுஐ ஆனது இலங்கயின் தேசிய தர நிர்ணயத்தின் அமைப்பாக இருக்கின்றமையினால் அது சர்வதேச தர நிணய அமைப்பின் (ISO). அங்கத்தவராக உள்ளது.

இலங்கை தர நிர்ணய நிறுவனமானது தேசிய தர நிணயங்களை மேம்படுத்தல் மற்றும் நாட்டினுள் தர நிர்ணயத்தினை விருத்தி செய்தல் என்பவற்றை பிரதான நோக்கமாகக் கொண்டது.

### 8.4.1 நோக்கு

“ தேசத்தின் வாழ்க்கைத் தரத்தை வளப்படுத்த தலைமைத்துவம் மூலம் பொருளாதாரத்தின் அனைத்துப் பிரிவுகளுக்குமான தரநிலைப்படுத்தல் மற்றும் தர மேம்பாடு , பொருளாதாரம் என்பவற்றை மேம்படுத்தும் இலங்கையின் முதன்மை நிறுவனமாக விளங்குதல்.

### 8.4.2 செயற்பணி

தேசிய பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் தரப்படுத்தல், அளவிடல், தர உறுதி மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளை பின்வருவனவற்றிற்காக மேற்கொள்ளுளதல்:

- உற்பத்தித் திறனை அதிகரித்து வளங்களின் பயன்பாட்டை அதிகரித்தல்.
- உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவித்தல்.
- சமூக பொருளாதார அபிவிருத்தியை அடைதல்.
- உற்பத்திகள் மற்றும் சேவைகளின் சர்வதேச போட்டித்தன்மையை உயர்த்துதல்.
- நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்தல்.

அதேவேளை, நிறுவன ஊழியர்களின் வேலைத் தரம் வாழ்க்கை என்பவற்றை உயர்த்துதல்.

### 8.4.3 பிரதான தொழிற்பாடுகள்

- ➢ தேசிய பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான தேசிய தர நிர்ணயங்களை வழங்கல்.
- ➢ “SLS” புள்ளிகள் திட்டம் போன்ற உற்பத்தி சான்றுறுதிப்படுத்தல் திட்டங்களை செயற்படுத்தல்.
- ➢ அடையாளம் காணப்பட்ட பொருட்களுக்கான இறக்குமதி பரிசோதனை
- ➢ ISO 9001, ISO 14001, ISO 22000 என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அமைப்பு சான்றிதழ்கள்
- ➢ பரிசோதனை வசதிகளை வழங்கி தேசிய திறன் பரிசோதனை மேம்படுததல்.
- ➢ அளவுத்திருத்த சேவைகள்
- ➢ துறைசார் ஊழியர்களுக்கு தரப்படுததல், தர முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய செயற்பாடுகளில் பயிற்சி அளித்தல்.
- ➢ கைத்தொழில் மற்றும் வர்த்தகத்திற்கான ஆவணப்படுததல் தகவல் சேவைகள் (தரம் மற்றும் தொழில்நுட்ப விதிமுறைகள்)
- ➢ தேசிய தர விருதுகள் திட்ட செயற்பாடு.
- ➢ ஏரிசக்தி முத்திரையிடல் திட்டம்

### 8.4.4 சிறப்பு அடைவுகள்:

- 2023 ஆம் ஆண்டில் சர்வதேச முகாமைத்துவ அமைப்புக்களின் தரங்களை ஏற்றுக்கொள்வது உட்பட 470 புதிய தரங்களை அறிமுகப்படுத்தியது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 100%அதிகரிப்பாகும். அதேபோல், 2023 ஆம் ஆண்டில் 155 தர நிலைகள் திருத்தப்பட்டன. இது 2022 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் ஒப்பிடும்போது 93% அதிகரிப்பாகும்.

- அதிகரிக்கப்பட்ட புதிய தரநிலைகள் தரவுப் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, சுற்றுலா, வலுசக்தித் திறன் மதிப்பீட்டிற்கான தரநிலைகள், நீர் பொருத்தல்கள் என்பவற்றை உள்ளடக்கியது.

- 2023 ஆம் ஆண்டில் சர்வதேச முகாமத்துவ அமைப்புக்களின் தரங்களை ஏற்றுக்கொள்வது உட்பட 4 புதிய தரங்களை அறிமுகப்படுத்தலானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. இதுபோன்றே 2023 ஆம் ஆண்டில், 15 தரநிலைகள் திருத்தப்பட்டுள்ளன. இது 2022 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுடன் ஒப்பிடும்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

- அறிமுகப்படுததப்பட்ட புதிய தர நிலைகள் தரவுப் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, சுற்றுலா, எரிசக்தித் திறன் மதிப்பீட்டிற்கான தரநிலைகள், நீர் பொருத்தல்கள் என்பவற்றினை உள்ளடக்கியது.

- 2023 ஆம் ஆண்டில் எழுபத்தொன்பது புதிய SLS அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்ட்டன. 2022 ஈஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 23% அதிகரிப்பாகும்.

- ளுடுளு குறியீட்டுத் திட்டத்தின் கீழ் ஐந்து (05) புதிய வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் சான்றுப்படுத்தப்பட்டனர். மற்றும் சேதன சான்றுப்படுத்தல் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

- எரிசக்தி அமைச்சின் இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இறக்குமதி செய்யப்பட்ட உராய்வு நீக்கிகள் மற்றும் அடிப்படை எண்ணெய் வகைகளின் இணக்க மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.
- இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தில் 34 புதிய விடயங்களை உள்ளடக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்ட்டன.
- SLSI இன் இறக்குமதி பரிசேதனைத் திட்டத்தின் ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் விதிமுறைகளுக்கமைய ஏல்பி எரிவாயு, எல்பிஜி இற்கான குழாய், வால்வு பொருத்தல்கள் மற்றும் எல்பிஜிக்கான ரெகுலேட்டர்களின் பயன்பாடு ஆகியவற்றின் பயன்பாடு , கண்காணிப்பு மற்றும் இணக்க மதிப்பீட்டினை சனவரி 2022 இல் செயற்படுத்தியது.
- ஏல்பிஜி எரிவாயு, உணவுப் பொருட்களின் கன உலோகங்கள், உரம் போன்றவற்றை பரிசோதிப்பதற்கான அதிநவீன உபகரணங்களை ஆய்வுகூடத்திற்கு கொள்வனவு செய்வதற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- விளைபொருட்கள், காபின் உருக்கு, உணவில் கனிம ஆசனிக், சீனியில் கனரக உலோகங்கள், விளைபொருட்கள் பழங்கள் மற்றும் காய்கறிகள், நீரில் காணப்படும் கனரக உலோகங்கள் என்பவற்றினைப் பரிசோதிப்பதற்கான அங்கீகாரத்தினைப் பெறுவதன் மூலம் அங்கீகார நோக்கத்தினை விரிவுபடுத்தியது.

- பொருட்களுக்கான ஆய்வுகூடத்தில் சீமெந்தினைப் பரிசோதிப்பதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

- இவ் வருடத்தில் 17 புதிய உற்பத்திகளுக்கான பரிசோதனை வசதிக் அபிவிருத்தி செய்யப்ட்டன.

- லஞ்ச எதிர்ப்பு முகாமைத்துவ முறைமைகள், நுஆளு இன் கட்ட அமுலாக்கலுக்கான சான்றுப்படுத்தல், தனியார் பாதுகாப்பு தொழிற்பாட்டு முறைமைகள், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) ஆகிய ஐந்து புதிய முகாமைத்துவ சான்றுப்படுதடதல் திட்டங்கள் அறிமுகப்படுததப்பட்டது.

- இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் (SLSI) தர நிர்ணயம், சான்றுப்படுத்தல் மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பான விழிப்புணர்வு இணையவழி கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டது.

- 2022 ஆம் ஆண்டில் தேசிய தர நிர்ணய விருது நிகழ்ச்சித் திட்டத்தினை நடத்தியதுடன், சிறிய மற்றும் நடுததர தொழில்முயற்சிகளுக்கான விசேட தர நிர்ணய விருதொன்றினையும் அறிமுகப்படுத்தியது.

- தேசிய தரநிர்ணய விருதிற்கு 2023 ஆம் ஆண்டு விண்ணப்பித்தோர் தொகையானது கடநத ஆண்டுடன் ஒப்பிடுகையில் 100% விகிதமாக அதிகரித்துள்ளது.

- நிறுவனத்தின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் முழுமையாக கணனிமயப்படுத்தப்பட்ட நிதி முகாமைத்துவ திட்டத்தினை அமுல்படுத்தல்.

- நிகழ்நிலை கொடுப்பனவு மூலம் ஆதரவளிக்கப்படும் இலத்திரனியல் சேவைகளை அமுல்படுத்தியதுடன் நிகழ்நிலை கொடுப்பனவுகள் மூலம் இலங்கை தர நிர்ணய தரங்களை தரவிறக்கம் செய்வதற்கு தற்போது வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 8.4.5 – கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம்

| இல. | மதிப்பு இயக்கி | Q3 இற்கான மொத்த இலக்கு | ஞ3 இற்கான உண்மையான மொத்த இலக்கு | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | **தேசிய தர நிர்ணயங்களைவ வகுத்தலும் விநியோகித்தலும்**<br>• புதிய தர நிர்ணயங்களை உருவாக்கல்.<br>• தற்போதைய தரங்களை மீளாய்வு செய்தல்.<br>• தற்போதைய தரங்களை மதிப்பாய்வு செய்தல்.<br>• முகாமைத்துவ முறைமையில் சர்வதேச தரங்களை மேற்கொள்ளல்.<br>• ந-நூலக முறைமையை நடைமுறைப்படுத்தல். | 135<br>110<br>70<br>45<br>மேற்கொள்ளப்படுகிறது | 191<br>155<br>50*<br>276<br>மேற்கொள்ளப்படுகிறது | தர உள்ளீட்டுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. (அனைத்து தர நிலைகள் ∴ e புத்தகங்கள்). இது இரண்டு மாதங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2 | **உற்பத்தித் தரச் சான்றிதழ்**<br>• கால அட்டவணையின்படி கண்காணிப்பு மறறும் புதுப்பித்தல் கணக்காய்வினை மேற்கொள்ளல்.<br>• சந்தை மாதிரிகளை கண்காணித்தல்.<br>• கைத்தொழில்களுக்கான ளுடுளு குறியீடு மற்றும் சேதன சான்றுப்படுத்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தலும் நிலுவையிலுள்ள நுகர்வோரின் வழங்கல்கள் செயன்முறையை துரிதப்படுத்தலும் ( வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்களின் தொகை)<br>• சேதன சான்றுப்படுத்தல் திட்டத்திற்கான சர்வதேச | 450<br>90<br>75<br>நிறைவு செய்யப்பட்டது. | 429<br>281<br>96<br>75% நிறைவு செய்யப்பட்டது<br>(EU) | SLAB அங்கீகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அங்கீகாரத்தினை வழங்கல். | | | |
| 3 | **இறக்குமதி, ஏற்றுமதி செய்யப்ட்ட உற்பத்திகளின் தர உத்தரவாதம்**<br>• கறுவா ஏற்றுமதிக்கு முன்னரான பரிசோதனைக்கு சர்வதேச அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல். | SLAB இற்க விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. | Application submitted to RVA இற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. SLAB இன் முன் மதிப்பீடு அக்டோபர் மாதம் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. | |
| 4 | **செல்லுபடியாகும் அளவீட்டு நடைமுறைகளை ஊக்குவித்தலும் பரப்புதலும்**<br>SLS குறியீட்டைக் கொண்டோர் உட்பட பாரிய அளவிலான கம்பனிகள் மீது கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதுள்ள வருமானத்தைப் பேணுதல் மற்றும் உள்நாட்டு அளவுத்திருத்த சேவைகளிலிருந்து ஈட்டப்பட்ட வருமானத்தை அதிகரித்தல்.<br>வருமான இலக்கு | 1650<br>(நேரத்திற்கு கிடைக்கப்பெற்ற அறிக்கைகளின் தொகை)<br>ருபா.15 மில். | 2068<br>ருபா. 16.8 மில். | |
| 5 | **பரிசோதனை சேவைகளை வழங்கல்**<br>அறிவிக்கப்பட்ட கால வரையறைக்குள் துல்லியமான பரிசோதனை முடிவுகளை வழங்குவதன் மூலம் ஆய்வுகூட வருடாந்த வருமானத்தை பாதுகாக்கும் அதேவேளை உள்ளக மற்றும் வெளியக வாடிக்கையாளர் தளத்தினை தக்க வைத்துக் கொள்ளல். | ருபா. 150 மில். | ருபா. 146.16 மில். | டிசம்பர் மாதமளவில் ருபா. 200 மில்லியன் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறத. |
| 6 | **முகாமைத்துவ அமைப்புகளின் இணக்க மதிப்பீடு**<br>முகாமைத்துவ அமைப்புகள் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களின் செயற்பாட்டை பராமரித்தல். – மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு கூபுதுப்பித்தல் கணக்காய்வுகளின் தொகை | 797 | 744 | |
| 7 | **பயிற்சியும் திறன் மேம்பாடும்**<br>ஆகக் குறைந்த அட்டவணைப்படுததப்பட்ட வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்கள் - பயிற்றப்பட்டோர் தொகை | 1750 | 693 | |